
நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 01 மலர் 02 ஆகஸ்ட் 2020 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்

"மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு அவர்களது கஷ்டங்களைப் போக்குதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை"

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்


# எங்கள் உறவுகள் எங்கே?




## நடந்து முடிந்த இலங்கைத் தீவின் நாடாளுமன்றத் தேர்தல் சொல்லிச் சென்றது என்ன?

## சட்டிக்குள் உள்ள நண்டுகளாய் தமிழ்க்கட்சிகள்!

## போராளிகளை சீண்டும் சிறிலங்கா படைகள்




# தமிழரசுக் கட்சி தப்புமா? தவறுமா?

**தேசிகன்**

9ஆவது பாராளுமன்ற தேர்தலைத் தொடர்ந்து தமிழ் தேசிய அரசியல் பரப்பில் தமிழரசுக் கட்சியினுடைய தேசிய பட்டியல் தெரிவும், தமிழரசுக் கட்சியினுடைய உள் விவகாரங்களும் அத்துடன் சுமந்திரனுடைய பாராளுமன்றத் தெரிவும் பேசுபொருளாக அமைந்திருக்கின்றது.

தமிழரசுக் கட்சியினுடைய வாக்கு வீதம் கணிசமான அளவு குறைந்ததன் காரணமாக ஒரே ஒரு தேசிய பட்டியல் மாத்திரமே அவர்களுக்கு கிடைத்திருந்தது. அதே சமயம் தமிழரசுக் கட்சியினுடைய தலைவர், செயலாளர் போன்றோர் தேல்வியடைந்துள்ளனர். அத்துடன், சசிகலா ரவிராஜ் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

இது தவிர அம்பாறையில் தமிழ் மக்களுக்கான ஆசனம் பல முனைப் போட்டியின் காரணமாக இழக்கப்பட்டது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அந்த ஒரு தேசிய பட்டியலை யாருக்கு கொடுப்பது என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சியினுடைய உயர்பீடம் ஆகியவை சேர்ந்து தீர்மானித்திருக்க முடியும்.

ஆனால், மாவை சேனாதிராஜாவுக்கு அந்த ஆசனம் கொடுக்கப்படக் கூடாது என்ற காரணத்தால் கட்சியின் தலைவரான அவருக்கே தெரியாமலும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்குத் தெரியாமலும் சுமந்திரன், சிறிதரன் மற்றும் தமிழரசுக் கட்சியினுடைய செயலாளர் துரைராஜசிங்கம் ஆகியோர் இணைந்து சம்பந்தனை வசப்படுத்தி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலையரசனுக்கு தேசிய பட்டியலுக்கு உரித்தான நாடாளுமன்ற உறுப்பினராக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தனர்.

இந்த நடவடிக்கையானது தமிழரசுக் கட்சிக்குள் கடினமான இருமுனைப் போராட்டத்தை உருவாக்கி இருக்கின்றது. கட்சியினுடைய செயலாளரான துரைராஜசிங்கம், பேச்சாளரான சுமந்திரன், கட்சியின் தலைமைப்பதவியைக் குறிவைத்துக் காத்திருக்கும் சிறிதரன் ஆகியோர் சம்பந்தனின் ஆசீர்வாதத்துடன் தமிழரசுக் கட்சியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைப்பாக செயற்படுகின்றனர்.

அதேசமயம், தமிழரசுக் கட்சியினுயை யாழ்ப்பாண மாவட்டக் குழுவும் அவர்களுடன் இணைந்து செயற்படக் கூடிய பெரும்பாலான உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தமிழரசுக் கட்சியானது தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என விரும்புகின்றார்கள்.

கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய முடியாது என்றும் பதிவு செய்தால் கட்சி தமது கையை விட்டு போய்விடும் என்றும் பெயரளவில் கூட்டமைப்பு இருப்பதுடன் தமிழரசுக் கட்சியின் பெயரும் சின்னமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற காரணத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய முடியாது என்று தொடர்ந்து மறுதலித்து வந்தனர்.

குறிப்பாக தமிழரசுக் கட்சித் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்டமைப்பாக இயங்குவதற்குப் பெருந்தடையாக இருந்து வந்துள்ளது. அப்படிப்பட்ட தமிழரசுக் கட்சியை இன்று அந்தக்கட்சியில் உள்ளவர்களே பிளவுபடுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இப்பொழுது தமிழரசு கட்சி என்ற பெயரும் அதனுடைய வீட்டு சின்னமும் யாரிடம் இருக்கப் போகின்றது என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

சிங்கள பௌத்த மேலாதிக்கவாத அரச பயங்கரவாதத்திலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாத்து தமிழ் மக்களின் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தி, தமிழர் தம் தேசியத்தை நீர்த்துப் போகச் செய்து, இலங்கை அரசாங்கத்தினுடைய பாதுகாவலர்களாக செயற்பட்டு வருகின்ற சம்பந்தன், சுமந்திரன் போன்றோருடன் அவர்களின் நிழலாகச் செயற்பட்டுவரும் சிறிதரன் மற்றும் துரைராஜசிங்கம் முதலானவர்களின் கைகளில் தமிழரசுக் கட்சி போகப் போகின்றதா?

அல்லது தமிழின விடுதலை தொடர்பாக அவ்வப்போதாவது பேசுகின்றவரும் இளம்பிராயத்திலிருந்து தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையுடன் பயணிப்பவரும், தேசியத்தலைவர் மேதகு பிரபாகரனின் நம்பிக்கையினை பெரிதும் பெற்றவரான மாவை சேனாதிராஜாவின் வசம் தமிழரசுக் கட்சி வரப் போகின்றதா?

இதற்கான போராட்டம் தற்போது ஆரம்பமாகிவிட்டது. களத்தில் இரு அணிகளாய் பிரிந்து நின்று ஆட்பிடிப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. இரகசிய சந்திப்புக்களும், திரைமறைவு திட்டங்களும் அரங்கேறிவருகின்றன. கட்சியின் தலைமையை பகிரங்கமாக விமர்சிக்கும் அளவிற்கு சுமந்திரன், சிறிதரன் இணையும் அவர்கள் தரப்பும் சென்றுவிட்டது.

தமிழரசுக்கட்சியைப் பொறுத்த வரையில் சிவகரன், அனந்திசசிதரன் உள்ளிட்டவர்கள் மீது கட்சிக்கு எதிராகப் பேசினார்கள் என்று ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருந்த அனுபவங்களைக் கொண்டிருக்கின்றது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக பேசினார் என்று ஆனந்த சங்கரியை கூட்டமைப்பிலிருந்து நீக்கிய அனுபவமும் காணப்படுகின்றது.

இந்த அனுபவங்களைக் கொண்டிருந்தாலும் சிறிதரன், சுமந்திரன் விடயத்தில் மாவை அடக்கியே வாசிக்கின்றார். அதுமட்டுமன்றி சுமந்திரன் மீது நிருவாகச் செயலாளர் குலநாயகம் நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துமூல கோரிக்கையை விடுத்தும் இன்னமும் அமைதி காக்கின்றார்.

தவறு விட்டோர் மீது தலைமை நடவடிக்கை எடுக்கத் தயங்கி வருகின்றமையானது, இன்று தந்தை செல்வா உருவாக்கிய கட்சியையே அவரது அடிப்படை சிந்தனைகளுக்கு எதிராக செயற்படும் ஒரு குழுவானது கட்சியை தன்வசம் எடுத்துக் கொள்ளும் ஒரு கடுமையான நிலை தோன்றியிருக்கின்றது.

தமிழரசுக் கட்சியினுடைய தலைமையின் பலவீனமான செயற்பாடுகளே இதற்கான காரணமாகின்றது. கடந்த காலத்தில் தவறுகள் நடைபெற்ற பொழுது மாவையும் அவர்களுடன் இணைந்தே அதற்கான சூத்திரதாரியாக இருந்தார். இன்று அவரையே திரும்பி தாக்கும் அளவுக்கு கட்சிக்குள் நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் 2009 இல் மௌனிக்கச் செய்யப்பட்ட தருணத்தில் தமிழரசுக் கட்சியின் இருப்பை தமிழ் மக்களின் நலன்சார்ந்து அனறிருந்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியினரே காப்பாற்றினர். பங்காளிகள் ஆதரவளித்து தமிழரசுக் கட்சியின் பதிவைக் காப்பாற்றி இருக்காவிட்டால் இன்று அந்த கட்சி செயற்பட முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

அப்படியிருக்க தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பில் இவ்வளவு தூரம் பொதுவெளியில் வந்து கூச்சல் போடும் சுமந்திரனும் சம்பந்தரும் மக்களின் ஆணையைத் துச்சமென மதித்து தன்னிச்சையாக முடிவெடுத்து மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபடுகின்றபோதும் அதனையெதிர்த்து குரல் கொடுக்க முன்வராதது நிலையிலேயே தற்போதைய பங்காளிக்கட்சிகள் இருக்கின்றன.

அதேநேரம் 15ஆம் திகதியன்று திருமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் சுமார் 45 நிமிடங்கள் வரையில் மாவை. சோனதிராஜா தனது நிலைப்பாட்டை தெரிவித்தார். அதற்கு அரசியல் குழு தலைவரோ அல்லது சம்பந்தனோ, தேசியப்பட்டியல் ஆசனத்திற்கான அறிவிப்பைச் சம்பந்தன், சுமந்திரன் ஆலோசனையில் செய்த பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கமோ சிலாகித்திருக்கவே இல்லை. வழமையைப் போன்றே மத்திய குழுவில் பார்க்கலாம் என்று மாவைக்கு தடாலடியாக தலையில் அடிக்கப்பட்டுவிட்டது.

அதுமட்டுமன்றி கட்சிப்பின்னடைவுக்கான காரணம் தேடல், சுயாதீனக்குழு நியமனம், அம்பாறைக்கு ஆசனம் வழங்கியமை சரி, முறையே தவறு என்று வேறொரு திசைக்கு விடயங்கள் சென்றாகிவிட்டன. மாவையால் வெட்டொன்று துண்டு இரண்டாக பேசமுடிந்திருக்கவில்லை. இந்நிலையில் மத்திய குழு கூட்டத்தில் மாவை என்ன செய்யப்போகின்றார்.

தலைமையின் அறிவுத்தலின்றி முறைதவறி, விதிமுறைகள் கடந்த பொதுச்செயலாளரை மாற்றுவாரா? இதற்கு பக்கபலமாக இருந்த சுமந்திரனின் முக்கிய பொறுப்புக்களை மீளப் பெறுவரா? பதவி நிலை மாற்றங்களுடன் முறையான மறுசீரமைப்பொன்றை கட்சிக்குள் மேற்கொள்வதற்கான தீர்மானங்களையேனும் எடுப்பாரா? ஆக மொத்தத்தில் மாவையின் தலைமையில் தமிழரசுக் கட்சி தப்புமா? தவறுமா? ■

நமது ஈழநாடு
www.namathueelanadu.com





முதுகெலும்பாக இருக்கும். இதனையே விடுதலைப் புலிகள் தாம் போராட்டத்தில் ஈடுபட்டபோது ஈழத்திலும் புலத்திலும் நடைமுறைப் படுத்தியிருந்தனர்.

இத்தகைய செயல் திட்டத்தை எமது தமிழ் அரசியல் வாதிகள் செயற்படுத்தாமையே இந்த பின்னடைவிற்கு காரணம். இவ் அரசியல் வாதிகள் தமக்குள் சொற்போர் புரிவதிலும் தமது தவறுகளை நியாயப்படுத்துவதிலும் பொழுதைப் போக்க, இவர்கள் தொண்டர்களோ மாறி மாறி ஒரு கட்சி உறுப்பினரை மற்றையவர் வசைபாடுவதிலும் செயற்பட்டதால் ஏனைய இடங்களில் குறிப்பிட்டு சொல்லக் கூடிய பெறுபேறு எதனையும் இவ்வணிகளால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

வடக்கு இவ்வாறு இருக்க, கிழக்கின் ஒரு பகுதி மக்களும் இவ்வாறு அரச சார்பு கொள்கையுள்ளவர்களின் பக்கம் சாய்ந்தமைக்கு மேற்கூறிய காரணங்களே பிரதான காரணங்களாக அமைந்தன.

தமிழ்த் தேசியத்தை விரும்புவோர் முதலில் மக்களை அரவணைக்க கற்றுகொள்ளவேண்டும். அதுமட்டுமல்

# நடந்து முடிந்த இலங்கைத் தீவின் நாடாளுமன்றத் தேர்தல் சொல்லிச் சென்றது என்ன?



**ச.அற்புதன்**
**(அரசியல் ஆய்வாளர்)**

நடந்து முடிந்த இலங்கை பாராளுமன்றத் தேர்தல் பல படிப்பினைகளை மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் சொல்லிக்கொடுத்திருக்கின்றது என்றால் மிகையாகாது. இது தமிழ்த் தேசிய பரப்பில் மட்டுமல்ல சிங்கள தேசிய பரப்பிலும் பல செய்திகளை மக்களுக்கு எடுத்தியம்பியுள்ளது.

தெற்கில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று வெற்றி வாகை சூடியுள்ளது பிரதமர் மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன கட்சி. இவர்களுடைய தேர்தல் பிரச்சாரமோ தமிழ் மக்களுக்கான சமஷ்டி தீர்வினை வழங்க முடியாது என்பதும் அத்தகைய தீர்வினை கேட்போர் சிறை செல்ல வேண்டும் என்பதும். ஆக தென்பகுதி மக்களின் இனவாதத்தை தூண்டி இத்தைகைய ஒரு வெற்றியை இவர்கள் பெற்றுள்ளார்கள் என்பது தெளிவு. மறுபுறம் தென்பகுதியின் பிரதான கட்சியான ஐக்கிய தேசிய கட்சியோ தமக்குள் உண்டான உள்பூசலால் வரலாற்றுத் தோல்வியை தழுவியுள்ளது. கூடி கெடுப்பதில் வல்லவரான ரணில் விக்கிரமசிங்க முதல் முதலாக அதன் வலியை இத் தேர்தல் ஊடாக உணர்ந்திருப்பாரென நம்புகின்றோம். தெய்வம் நின்று கொல்லும் என்பது இதுதானோ?

வடக்கிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கை மாறி செல்கின்றது என்ற கோஷத்தில் திரு கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான அணி தமது அரசியலை முன்னெடுத்தது. அதே கொள்கையையே விக்னேஸ்வரன் ஐயாவின் தலைமையிலான அணியும் முன்னெடுத்தது. மாற்று என்ற ஒரே கொள்கை ஆனாலும் இரண்டு அணிகள், ஆக மொத்தத்தில் தமிழ்த்தேசியம் பேசுகின்ற மூன்று அணிகள் களத்தில் நின்றன. இது தமிழ்த் தேசிய கொள்கையுள்ள மக்களின் வாக்குகளை மூன்றாக சிதைத்தது மட்டுமல்லாமல் அரச ஆதரவு தரப்புக்கள் கூடுதலான வாக்குகளை பெறுவதற்கும் வழியமைத்து கொடுத்தது.

இவ்வாறு அரசு சார்பு அணிகளின் பின்னால் சென்ற மக்களின் பிரதான காரணம் தமிழ்த் தேசியம் பேசும் தலைமைகள் வெறுமனே அரசியல் உரிமை-களை மட்டுமே முன்வைத்து தமது பயணத்தை முன்னெடுக்கின்றன, அதுவும் ஒருவருடம் இரண்டுவருடம் அல்ல 70 வருடங்கள் இத்தகைய கோஷத்தை முன்னிறுத்தி சென்றமையே இதற்கான பிரதான காரணம். தமக்கான விடியல் வரும் என்ற நம்பிக்கை அம்மக்கள் மத்தியில் இல்லாமல் பொனதற்கு இதுவே காரணம். அகிம்சையோ வன்முறையோ ஒரு போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தமது பொருளாதாரத்தை போராட்டத்திற்கு சமாந்தரமாக கட்டி எழுப்ப வேண்டும், இதுவே போராட்டத்தின் தாம் விரும்பும் அரசியல் தலைவருக்காக பிற்பாட்டு பாடுவதிலும் காலத்தை செலவிட்டனர். சுருங்கச் சொன்னால் தமிழக அரசியலைப் பின்பற்ற தொடங்கி விட்டார்களோ என்ற அச்சமே ஈழ மக்களுக்கு தோன்றியுள்ளது. ஆக்க பூர்வமான பொருளாதாரத் திட்டங்களோ தூர நோக்கு சிந்தனைகளோ இவர்களிடம் இல்லை. இந்த நிலை நீடிக்குமானால் எதிர்காலங்களில் சிங்கள தேசிய கட்சிகள் எமது தாயாகப் பிரதேசங்களில் அதிகூடிய ஆசனங்களை பெற்றாலும் அதிசயப் படுவதற்கு ஒன்றுமில்லை.

மேலும் தமிழ்த் தேசியம் பேசும் தலைமைகள் தமக்குள் முரண்பட்டு நின்றதும் இம் மக்கள் அரச சார்பு அணிகளின் பின்னால் செல்வதற்கு காரண-மாக அமைந்தது. தமிழருக்கான தீர்வு விடயத்தில் ஒருமித்து நிற்க முடியாதவர்கள் தமக்கான தீர்வினை எப்படி பெற்றுத்தர போகின்றார்கள் என்ற சந்தேகமும் இதற்கு பிரதான காரணமாக அமையலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கை மாறி செல்கின்றது அதனை சரிப்படுத்த வேண்டும் என்று நினைப்பவர்கள், பின்னர் தமக்குள் முரண்பட்டு இரண்டு அணிகளாய் பிரிந்து நின்றதும் மக்களின் அதிருப்திக்கு காரணமாக அமைந்தது. அதுமட்டுமன்றி மாற்று அணி என்று கூறுபவர்களின் வாக்கு வங்கி வெறுமனே யாழ் மாவட்டத்தை மட்டுமே நோக்காக கொண்டு லாமல் மாற்றம் ஒன்றை விரும்பி செல்லும்போது எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிக்கக் கூடிய ஆளுமையை கொண்டிருத்தல் வேண்டும். அதைவிடுத்து, இவரை இணைத்தால் கட்சி தாவி விடுவாரோ என்ற சந்தேகத்தில் பயணிப்போமானால் இறுதியில் எம்மைத் தவிர எம்மை சுற்றி ஒருவரும் இருக்க மாட்டார்கள்.

யதார்த்தத்தை கூறப்போனால் இலங்கை பாராளுமன்றத்தால் தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வினை பெற்றுக் கொள்ளமுடியாது என்று தெரிந்தும் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமது முரண்பாடுகளை களைந்து சர்வதேச அரங்கில் பேசுசக்தியாக அவர்களை உலவ விட்ட தேசியத்தலைமையின் ஆளுமை இப்பொழுது இருக்கும் எந்த தலைமைக்கும் இல்லை என்பதையும் இத்தேர்தல் சொல்லிச்சென்றுள்ளது.

ஆகவே, கொள்கை அடிப்படையில் ஒன்றாக இணைந்து பயணிக்கும் நிலைக்கு தமிழ் தலைமைகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம். இதற்குத் திரு விக்னேஸ்வரன் மற்றும் திரு கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோரை நோக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் திரு சுமந்திரனின் அழைப்பு ஓர் ஆரம்ப புள்ளியாக இருக்கும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 01 மலர் 02 ஆகஸ்ட் 2020 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# தமிழர் தரப்பு எப்படி எதிர்வினை ஆற்றப்போகிறது?

தேர்தல் முடிவடைந்து எல்லோரும் எதிர்பார்த்தது போலவே பொதுசனபெரமுன பெரு வெற்றியை பெற்றதுடன் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான மொட்டு கட்சியின் ஆட்சி மலர்ந்துவிட்டது. தமிழ் மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சரி பெரும்பான்மை இனமான பௌத்த சிங்கள மக்களின் பெரு விருப்பின் அடிப் படையிலேயே ஆட்சி அமையும் என்பது இலங்கையின் எழுதா விதியாகும். தமிழர்களின், இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவரின் தலைவிதியும் இதுவேயாகும்.

தம்பியும் அண்ணனும் அதாவது கோட்டபாயவும் மகிந்தவும் அவர்கள் மிகவும் எதிர்பார்த்த மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை முழுமையாக கைப்பற்றிவிட்டார்கள். அல்லது இதோ! நீங்கள் கேட்ட அபரிமிதமான பலம் நீங்கள் விரும்பியபடி உங்கள் அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தி எதனை வேண்டுமானாலும் செய்யுங்கள் என பெரும்பான்மை இனத்தவர் நாட்டை ராஜபக்ஷாக்களிடம் கையளித்துவிட்டார்கள்.

தட்டிக்கேட்கும் வல்லமையற்ற எதிர்க்கட்சி நாடாளுமன்றில் வெறுமனே வலுவற்ற ஒரு எதிர்க்கட்சியாகவே தன்னை அடை யாளப்படுத்த முடியும்.

சிறுபான்மை இனத்தவர்களின் தேசிய தனித்துவம் குறித்த அபிலாஷைகள் அவர்களின் தலைவர்களின் தொலைநோக்கு சிந்தனையற்ற அரசியல் முன்னெடுப்புக்களாலும் அபத்தமான அறிவியல்களாலும் பொறுப்பற்ற உட்கட்சி முரண்பாடுகளாலும் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு சிதறுண்டுபோன நிலை யில் தமிழ் மக்கள் வழிதவறியவர்கள் போல் நிற்கிறார்கள்.

மக்களுக்கான அரசியலை ஒருமித்த வலுவுடன் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உரத்த சிந்தனையுடனும் அழுத்தமான முறையில் முன்னெடுக்க வேண்டியவர்கள் வெறு மனே அருவருப்பான கட்சி அரசியலுள் கரைந்துபோய் பரி தாபத்திற்குரிய ஜென்மங்களாய் தம்மை முழுமையாக இனம்காட்டி நிற்பது தமிழ் மக்களை தலைகுனிய வைத்துள்ளது.

இந்த சூழ்நிலையானது பெரும்பான்மை இனத்தவரின் எள்ளி நகையாடலுக்கு அவர்களை மட்டுமல்லாது முழுத் தமிழினத்தையுமே உள்ளாக்கியுள்ளது.

இதன் எதிரொலியாக ஆட்சி பொறுப்பை ஏற்று ஒருவாரம் முடிய முன்னரே பௌத்த சிங்கள பேரினவாதம் தன்னியல்பை வெளிப்படுத்த தொடங்கிவிட்டது.

“தமிழர் தரப்பு அவர்களது பிரச்சனைகள் தொடர்பாக இனிமேல் சர்வதேசத்தை நாடமுடியாது. அதற்கு அனுமதிக்கவே மாட்டோம்.”

“வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு இனி இராணுவம் தான் பாதுகாப்பு”

“13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும்”

“காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வடக்கு கிழக்கு மாகாணசபைகளுக்கு வழங்க அனுமதியோம்”

“அரசுடன் உள்ள தமிழ் உறுப்பினர்களுடன் பேசியே தமிழர்களின் பிரச்சினைக்கு முடிவு காண்போம் ”

இவையெல்லாம் கடந்த சில நாட்களுள் அரச தரப்பிலிருந்து தமிழ் மக்களுக்கு அறிக்கைகள் மூலம் விடப்படும் அச்சுறுத்தல் எச்சரிக்கை சமிக்ஞைகளாகும்.

ஆக, புதிய அரசு எப்படி தமது ஆட்சியையும் எமக்கான அரசியலையும் நகர்த்த திட்டமிட்டுள்ளார்கள் என்பதன் வெளிப் பாடுகளாகவே இவற்றை கருத்தில் கொள்வது அவசியமாகும்.

இலங்கை ஒரு பௌத்த நாடு இங்கு ஆட்சி செய்வது சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவுப் பலத்தால் உருவாக்கப்பட்ட அரசு என்ற மேலாதிக்க சிந்தனை கொண்டவர்களின் அரசி யல் இலக்கு, தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளாது என்பதையே மேற்குறித்த அறிக்கை அறிவிப்புக்கள் திடமாக உணர்த்தி நிற்கின்றன.

தமிழ் தலைமைகளின் இது தொடர்பான எதிர்வினை எவ்வாறு அமையப்போகிறது என்பது தான் மில்லியன் டொலர்கள் பெறு மதியான வினா?



# இராஜபக்சாக்கள் எதிர்கொள்ளும் புதிய சவால்



இதயச்சந்திரன்,
சிரேஷ்ட ஊடகவியலாளர்

*இலங்கையின் மொத்த உள்ளூர் உற்பத்தியில் (GDP) 86.8 சதவீதம் கடன்.*

*வருகிற ஒக்டோபரில் 1 பில்லியன் டொலர் அரச பிணை முறியை (state sovereign bond) மீளச் செலுத்த வேண்டும்.*

*இந்த வருடம் மட்டும், செலுத்த வேண்டிய மொத்த கடன் ஏறத்தாள 2 இலட்சம் கோடி ரூபா .*

*அதிலும் இந்தியாவிற்கு கொடுக்க வேண் டிய கடன் மீள் அளிப்புத் தொகை 960 மில் லியன் அமெரிக்க டொலர்.*

*கடனை சிறிது காலத்திற்கு உறைநிலையில் வைக்குமாறு இலங்கை விடுத்த கோரிக்கையை சில மாதங்களாக (!) பரிசீலனையில் வைத்துள்ளது இந்தியா.*

*அத்துடன் திறைசேரியில் டொலர் நாணயம் குறைவடைந்த நிலையில், 1.1 பில்லியன் டொலர் பெறுமதிக்கு Currency Swap (இரு நாட்டு சொந்த நாணயப் பரிவர்த்தனை) ஒப்பந்தத்தை ஏற்படுத்த சனாதிபதி கோட்டாபாய இராஜபக்ச மேற்கொண்ட முயற்சியும் பலனளிக்க வில்லை.*

*இருப்பினும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம், முதலீடுகளை மேற்கொள்ளுமாறு கோட்டாபாய விடுத்த வேண்டுதலுக்கு இன்னமும் பதிலில்லை.*

*அதே வேளை சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளது இலங்கை.*

*ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் கொரோணாவினால் சகல வெளிநாட்டு வருவாயும் வீழ்ச்சியடைந்துள்ளது.*

*ஆகவே மேற்கும் இந்தியாவும் சற்று பின்வாங்கிய நிலையில் சீனாவின் புதிய அபிவிருத்தி வங்கியிலிருந்து 500 மில்லியன் டொலர்களை கடனாகப் பெறுவதற்கு கடந்த மே 13 அன்று உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.*

*இந்தப் பொருளாதாரச் சிக்கலே, இராஜபக்சக்களின் இலங்கை குறித்தான புவிசார் அரசியலை நிர்ணயிக்கும் அல்லது வடிவமைக்கும் அகப் புறக் காரணிகளாக அமையப் போகிறது.*


*போரின் போது சகல வெளித்தரப்புகளையும் கையாண்ட அதே மூலோபாய உத்தியினை இனியும் கையாள்வது கடினம் என்பதனை கோட்டபாய ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன் உணர்ந்திருப்பார்.*

*இனி இலங்கைத் துறைமுகங்களை பங்கு போடும் வல்லரசுகளின் ஆட்டம் ஆரம்பமாகலாம்.*

*அதன் முதல் நகர்வாக கொழும்புத் துறைமுக கிழக்கு கொள்கலன் முனை குறிவைக்கப்படும்.*

*அடுத்தது திருக்கோணமலைத் துறைமுக மையம்.*

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...





# கோவிட்-19 உம் உளநலமும்

**ஜெயந்திரன்**

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மலர்ந்த போது, இந்த ஆண்டு எப்படியெல்லாம்அமையப்போகின்றதுஎன்று எங்களையே நாங்கள் பல கேள்விகள் கேட்டிருப்போம். ஆனால் அது இப்படித்தான் இருக்கும் என்று எங்களில் யாருமே கனவு கூடக்கண்டிருக்க மாட்டோம். வருடத்தின் ஆரம்பத்தில் சீனாவில் கொரோணா நுண்ணுயிரியின் பரவல்பற்றி நாம் அறிந்த போதும் அது நாம்வாழும்நாடுகளுக்கெல்லாம்வந்து, எமது அன்றாட வாழ்வையே கேள்விக்குறிக்குள்ளாக்கும் என்று நாங்கள் யாருமே நினைத்திருக்க மாட்டோம். கடந்த ஆறு மாதங்களில் கொரோணா நுண்ணுயிரி இல்லாத நாடே இல்லை என்று சொல்லுமளவுக்கு இந்த நுண்ணுயிரியினால் தோற்றுவிக்கப்படும் கோவிட்-19 என்ற நோயின் தாக்கம் உலகம்முழுவதையும்பாதித்திருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில் கோவிட்-19 இன் தாக்கம் அமெரிக்க, தென் அமெரிக்க நாடுகளிலும் இந்தியா போன்றநாடுகளிலும்அதிகமாகஇருப்பதை செய்திகள் மூலமாக நாம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

தாயகத்திலும், புலம்பெயர்ந்துநாம் வாழும் பல நாடுகளிலும், கோவிட்-19 இன் தாக்கம் கணிசமான அளவு குறைந்திருக்கின்ற போதிலும், இந்த நுண்ணுயிரி எம் எல்லோரதும் நாளாந்த வாழ்வையே புரட்டிப்போட்டிருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஒரு புறம் இந்த நுண்ணுயிரியினால் ஏற்படுத்தப்படும் நோயிலிருந்து எம்மைப்பாதுகாக்கசமூகவில-கல், முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற செயற்பாடுகளிலே எம்மில் பலர் மிகவும் விழிப்பாக இருக்கின்ற போதிலும் இந்த நுண்ணுயிரி உருவாக்கியிருக்கும் இப்புதிய சூழலில் எமது உளநலத்தை எப்படிப் பேணிப்பாதுகாக்கலாம் என்பதைச் சிந்திக்க நாங்கள் பொதுவாகவே தவறிவிடுகிறோம்.

கோவிட்-19 இன் தாக்கத்தினால் நாம் அனைவரும் எமது வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்க வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. எம்மால் வெளியே செல்ல முடியவில்லை. வழிபாட்டுத்தலங்களுக்குச் செல்ல முடியவில்லை. எமது வழமையான சமூகக் கொண்டாட்டங்களையோ, நிகழ்வுகளையோ நடத்த எம்மால் முடியவில்லை. எம்மிலேபலர்எமதுதொழில்களை வீடுகளுக்குள் இருந்தே செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தக்கு உள்ளாகியிருக்கிறோம். மாணவர்களும் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க முடியவில்லை. இணையத்தின் துணையோடு கல்வி கற்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது சிறுவர்களைப் பொறுத்தவரையில் பாடசாலையில் அவர்களுக்கு பல்வேறுவிதமான செற்பாடுகள் இருந்தன. விளையாடக்கூடிய வாய்ப்பு அங்கே அவர்களுக்கு இருந்தது. ஏனைய மாணவர்களுடன் கலந்துரையாடிக் கல்விகற்க அவர்களால் முடிந்தது. ஆனால் கோவிட்-19 எல்லாவற்றையும் மாற்றியமைத்துவிட்டது. கணினிக்கு முன் பல மணித்தியாலங்களை மாணவர்கள் செலவழிக்க வேண்டிய சூழலை இந்த நோய் உருவாக்கிவிட்டது.

கோவிட்-19 இலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள சமூக விலகலைக் கடைப்பிடிக்குமாறு நாம் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றோம். இந்த நோயிலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள இந்த சமூக விலகல் அத்தியாவசியமானதாகும். ஆனால் அதே நேரத்தில் இந்த சமூக விலகலின் காரணமாக எமது வழமையான உறவுகளையும்தொடர்புகளையும்பேணமுடியாத ஒரு நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இவை அனைத்தையும் உற்றுநோக்கும்போது, கோவிட்-19இனால்தோற்றுவிக்கப்பட்ட இந்த சமகாலச் சூழல், எமது உளநலனை அதிகமாகப் பாதித்திருப்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். குறிப்பாக நாள் முழுவதும் சிறுபிள்ளைகளுடன் வீட்டுக்குள்ளேயே தங்கள் நேரத்தைச் செலவிடும் தாய்மாரின் உணர்வுச் சூழல் புரிந்துகொள்ளப்படவேண்டியதெனறாகும்.

எனவே ஒருபுறம் கோவிட்-19 இன் தொற்றுக்கு நாம் ஆளாகிவிடாது நாம் மிகவும் விழிப்பாக இருக்கும் அதே வேளையில் இந்த நுண்ணுயிரியினால் உருவாக்கப்பட்டிருக்கும் இப்புதிய சூழலினால் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடிய எமது உளநலனையும் நாம் பாதுகாத்துப் பேணவேண்டும் என்ற விழிப்புணர்வும் எம்மிடையே உருவாக வேண்டும்.

இன்று பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட ஈழத்தமிழர்கள் நாங்கள் புலம்பெயர்ந்து உலகின்பல நாடுகளில்வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆனால்புலம்பெயர்ந்ததமிழர்களில்அதிகமானோர் 1983ம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியிலேயே மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்திருக்கின்றோம். அப்படியென்றால் எம்மில் பலர் ஏற்கனவே போரின்பல்வேறு உடலியல், உளவியல் தாக்கங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றோம். எமக்கு ஏற்பட்ட உடலியல் பாதிப்புகளுக்கு எம்மில் பலர் நாம் ஏற்கனவே சிகிச்சைபெற்றிருக்கின்றோம். ஆனால் எமக்கு ஏற்பட்ட உளவியல் ரீதியிலான பாதிப்புகளுக்கு எம்மிலே எத்தனை பேர் உரிய சிகிச்சை பெற்றிருக்கின்றோம் என்பது நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விடயமாக இருக்கின்றது. ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தைச்சார்ந்த நாங்கள், தற்போதைய கோவிட்-19 என்ற இப்புதிய நோயினால் உருவாக்கப்பட்டிருக்கும் இப்புதிய அசாதாரணமானசூழலின்காரணத்தால்இன்னும் அதிகமாகவே உளரீதியாகப் பாதிக்கப்படக்கூடியவாய்ப்புஇருக்கின்றதுஎன்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

உலகெங்கும் வாழும் பல்வேறுபட்ட சமூகங்களைநாம்ஆய்ந்துபார்க்கும் போது, எல்லா மக்கள் நடுவிலும் உளப்பாதிப்புகள்தொடர்பாகவும்உளநோய்கள் தொடர்பாகவும் தமக்கு இருக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்குப் பின்னிற்கும் இயல்பு வியாபித்திருப்பதைக் காணமுடிகின்றது.

இதற்குக் காரணம் உளநோய்க்கு உள்ளாகுவோர் உளநோயாளிகள் என முத்திரைகுத்தப்படுவதேஆகும். எமது சமூகத்திலும் எமக்கிருக்கும் உளப்பிரச்சினைகள் பற்றியும் உளநோய்கள் பற்றியும் நாம் வெளிப்படுத்த தயங்கும் இயல்பு பரவலாகக் காணப்படுகின்றது. உளநோய்களுக்கு உள்ளாகிவிட்டால் அவனோ, அவளோசமூகத்தில்தாழ்ந்த நிலையில் இருப்பதாக நாம் எண்ணிக்கொள்வதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

குறிப்பாக எமது குடும்பத்திலே யாராவது உளரீதியான பாதிப்புகளையோ அன்றேல் உளநோய்க்கான அறிகுறிகளையே வெளிப்படுத்தும் போது எமது குடும்ப மதிப்புக் கருதி குறிப்பிட்ட அப்பிரச்சினைகளுக்கான நிவாரணங்களை உடனடியாகப் பெற்று அவற்றின் தாக்கங்களிலிருந்து விடுபடவோ அல்லது மற்றவர்களை விடுவிக்கவோ நாம் முயற்சிப்பதில்லை. உடல்நோய்களுக்கானபரிகாரங்களை நாம் உடனடியாகவே தேடிக்கொள்கின்றோம். அது எங்களுக்கு எந்த விதத்திலும் பிரச்சினையாக அமைவதில்லை.

ஆனால் அதே வேகத்தில் உளரீதியான பிரச்சினைகளுக்கான பரிகாரங்களைநாங்கள்தேடிக்கொள்வதில்லை. இன்று உலகில் உளநோய்கள் பற்றிய அறிவு மிக அதிகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. பல உளநோய்களுக்கு செயற்றிறன்மிக்கசிகிச்சைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

எமக்கு உடல்ரீதியான நோய்கள் ஏற்படுகின்றபோது அவற்றுக்கான சிறந்த சிகிச்சையைப் பெறுவதற்கு நாம் முயற்சி எடுக்கின்றோம். அது போலவே உளநோய்களையும் நாம் கருத வேண்டும். எமது சமூகம் உளநோயாளிகளை தாழ்வாகப் பார்க்கும் பார்வையிலிருந்து கட்டாயம் வெளியே வரவேண்டும். உளரீதியான பாதிப்புகளுக்கும் நோய்களுக்கும் விரைவாக சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள நாம் முன்வரவேண்டும். அதுமட்டுமன்றி எமது குடும்பத்தில் அல்லது சமூகத்தில் உளத்தாக்கங்களோடு வாழ்பவர்களை நாம் இனங்காணும் போது, உரிய சிகிச்சையை விரைவாகப் பெறுவதற்கு அவர்களுக்கு நாங்கள் வழி காட்ட வேண்டும்.

அன்றாடம் நாம் சந்திக்கும் அனுபவங்களின் காரணமாக பல்வேறுபட்ட உணர்வுகளைநாம்அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். நாம் அனுபவிக்கும் இந்த உணர்வுகள் கணத்துக்குக்கணம் மாற்றம் அடைந்துகொண்டிருக்கின்றன. இந்த உணர்வுகளில் கோபம், கவலை, பயம், ஏமாற்றம் போன்ற உணர்வுகள் எம்மை ஆழமாகப் பாதிக்கக்கூடியவை.

எமது உளநலனை நாம் நன்கு பேணவேண்டும் என்றால் எமக்கு அவ்வப்போது ஏற்படும் உணர்வுகளுக்கான சரியான வடிகால்களை நாம் அமைக்க வேண்டும். எம்மைப் பாதிக்கும் உணர்வுகள் பற்றி மனம் திறந்து நாம் நம்பக் கூடியவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். எமது உணர்வுகள் பற்றி நாம் அடுத்தவர்களுடன் மனம் திறந்து உரையாட வேண்டும். எம்மைத் தொடர்ந்து பாதித்துக்கொண்டிருக்கும் உணர்வுகள் பற்றி நாம் மனம் திறந்து உரையாடாது, அவற்றை நாம் உள்ளத்தில் ஆழப்புதைக்கும் பழக்கத்தை கைக்கொள்வோமானால், எங்கள் ஆழ்மனத்தில் புதைக்கப்படும் அந்த உணர்வுகள் ஒன்றுசேர்ந்து எரிமலை திடீரென்று வெடிப்பது போல, எம்மை அறியாமலே ஒரு நாள் வெளிவரும். கட்டுப்படுத்தப்படும் அந்த உணர்வுகள் திடீரென வெளி-வரும் போது அது எமக்கும் எம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்துபவையாக அமைந்துவிடும்.

ஆகவே தற்போதைய கோவிட்-19க்குப் பின்னரான சூழலில், எமது உடல்நலனை மட்டுமல்ல எமது உளநலத்தையும் பேணிப்பாதுகாக்க நாம் முன்வரவேண்டும். எமது உள்ளத்துக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் விடயங்களில்எம்மைநாம்ஈடுபடுத்துவது அவசியமானது. நீண்ட நேரம் வேலை செய்த பின் ஒரு நடைப்பயணத்தை மேற்கொள்வது உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்வைக்கொடுப்பதாக அமையும். உளஇறுக்கத்தை விடுத்து உளம் திறந்து பேசும் பழக்கத்தை நாம் கைக்கொள்ளவேண்டும். இக்காலத்தில் சமூக விலகல் அவசியமானது.

ஆனால் அது உணர்வு ரீதியிலான விலகலைத் தோற்றுவிக்கக்கூடாது. இப்புதிய சூழலில் எமது குடும்பத்திலோ அதற்கு வெளியிலோ அடுத்தவர்களின் உணர்வுகளை நாம் புரிந்து அதற்கேற்ற நடக்கவேண்டிய தேவை இருக்கின்றது. எம்மையும் அடுத்தவர்களையும் துல்லியமாகப்புரிந்துகொள்வதும், எமது உணர்வுகள் மட்டில் விழிப்பாக இருந்து அவற்றை வெளிப்படுத்த உரிய வழிமுறைகளைத் தேர்வு செய்வதும் உளநோய்களுக்கு உள்ளாகும் போது உளவளத்துணை மற்றும் உளமருத்துவர்களின் உதவியை உரிய நேரத்தில் நாடுவதும் எமது உளநலனைப் பேணுவதற்கு இக்காலத்தில் நாம் கைக்கொள்ள வேண்டிய செயற்பாடுகளாகும்.

**- நன்றி : இலக்கு**



# சட்டிக்குள் உள்ள நண்டுகளாய் தமிழ்க்கட்சிகள் !

## மீண்டும் ஆபத்தின் வாயிலில் தள்ளிவிடப்பட்டுள்ள தமிழர்கள்



**ப.சுகிர்தன்**

யுத்த வெற்றிவாதத்தை சிங்கள பௌத்த பெருந்தேசிய வடிவமாக கொண்டு இயங்கும் ராஜபக்ஷக்களின் கறைபடிந்த கரங்களில் மீளவும் ஒட்டுமொத்த ஆட்சிப்பீடம் சென்றடைந்துள்ளமை இலங்கையின் சிறுபான்மையினரிடத்தே மீண்டுமொரும் அடக்குமுறை பீதியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் நடந்துமுடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய நோக்கு நிலையை கொண்ட வடக்கு - கிழக்கின் மூன்று பெரும் கட்சிகள் வாக்குகளை பிய்த்து பிடுங்கிக்கொண்டன. இதனால் இலாபம் அடைந்தது தமிழ் தேசிய நோக்கு நிலையை கொண்டிராத கட்சிகள்தான். அதிலும் குறிப்பாக ராஜபக்ஷாக்களுக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் முட்டுக்கொடுக்கும் கட்சிகளே.

சிதறிப்போன வாக்குகளின் விளை-வால் இலாபம் அடைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு தேவையான பலமான அடித்தளம் ஒன்றைப் பெற்று யுத்தவெற்றியை நிறுவனமயப்படுத்தி கட்டியெழுப்பப்பட்ட தாமரை மொட்டுகட்சி ஆட்சிக்கதிரையை கைப்பற்றியுள்ளார்கள்.

நம்பிக்கை இழப்பின் விளிம்பில் நின்றுகொண்டு அரசியல் தீர்வு ஒன்றே இறுதித்துருப்பு என்று எண்ணி என்றுமில்லாதளவில் இம்முறை வாக்குகளை வழங்கிய தமிழ் மக்களை தமிழ் கட்சிகள் ஏமாற்றியது மட்டுமல்லாது அவர்களை மீண்டும் ஆபத்தின் வாயிலில் தள்ளிவிட்டுள்ளார்கள்.

தமிழ்மக்களின்வாக்குகளின்றி இதுவரை காலமும் எக்கட்சியும் ஆட்சியை அமைக்க முடியாது என்ற பெரும் சவால் இருந்து வந்தநிலையில் இம்முறை உட்கட்சி மோதல்களால் வாக்குகளை சிதறவிட்டுள்ளார்கள்.

இதனால் தமிழ்மக்களின் ஒருமித்த குரல் தாங்களே என தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனிமேல் கூறமுடியாது எனவும் அவர்களுடன் எந்தவித பேச்சுவார்த்தைக்கும் தாங்கள் தயாராக இல்லை எனவும் அண்மையில் பசில் ராஜபக்ஷ பகிரங்கமாக கூறியிருந்தார். இந்த கூற்றுக்கு காரணகர்த்தாக்கள் தங்கள் வாக்குவங்கியை நிரப்ப சட்டிக்குள் உள்ள நண்டுகள்போல் சண்டைபோட்டுக்கொண்ட தமிழ் பிரதிநிதிகளே காரணம்.

எட்டு மாதங்களிற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலின்போது ஓர் இனமாக திரண்டு நின்ற மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் கட்சிகளாகவும் பிரதேசங்களாகவும் நலன்களாகவும் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் இலங்கையில் சிறுபான்மையினர் மீண்டுமொரு அபாய நிலையை அடைந்துள்ளனர். 2009 யுத்தவெற்றியின் பின்னர் ஓர் இன அலை-யை தோற்றுவித்து ஆட்சிப்பீடம் ஏறிய ராஜபஷக்கள் பின்னர் கடந்த 2019 ஈஸ்டர் குண்டுவெடிப்பு விளைவுகளை வைத்து அதனை தூசுதட்டினார்கள். இப்பொழுது கொவிட் 19ஐ வைத்து மீண்டும் புதுப்பித்திருக்கிறார்கள்.

அந்தவகையில் தற்போது ராஜபக்ஷக்களினதும் யுத்தக் கறைபடிந்தவர்களினதும் கைகளிற்கு மாறியுள்ள இலங்கைத்தீவு ஒரு சர்வதிகார - பேச்சு சுதந்திரமற்ற - அடக்குமுறை ஆட்சியை எதிர்நோக்கியுள்ளது.

பௌத்த, சிங்கள பேரினவாத சிந்தனையில் தன்னை விஞ்சி யாரும் இல்லை இருந்திடவும் கூடாது என்ற கொள்கையில் பிரதமர் மகிந்த உள்ளார். இவரது அடிநாதம் அதுவாக இருக்கையில் தம்பியின் விருப்புக்களை அண்ணனான ஜனாதிபதி கோட்டபாயா மறுக்கவா போகிறார்!

இலங்கையில் ஆட்சி ஒரு சர்வதிகாரமாக மாறுவதற்கான பாதையில் உள்ளது என்ற கருப்பொருளில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் (ITJP) அண்மையில் ஒரு விளக்கப்படம் ஒன்றினை வெளியிட்டிருந்தது. அதில் ஜனாதிபதி கோட்டபாய தன்னிச்சையாக அதிகாரக் கதிரைகளை யுத்தக்கறைபடிந்தவர்களின் கரங்களிற்கு வழங்கி அவர்களை காப்பாற்றிக் கொள்ள நடவடிக்கைகளை செய்துவருகிறார் என விளக்கியிருந்தது.

அதுபோலவே இலங்கை தற்போது ஒட்டுமொத்தமாக யுத்தக்கறைபடிந்தவர்களின் கைகளிற்குள் தாரைவார்க்கப்பட்டுள்ளது.

இதனிடையே நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளின் பின்னர் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் முதலாவதாக பெரும் எச்சரிக்கை மணியை அடித்துள்ளது.

அதாவது நாடாளுமன்ற தேர்தலில் பெரு வெற்றியடைந்துள்ள அரச தரப்புக்கு எதிரான கருத்துக்களை உடையவர்கள் பெரும் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படும் அபாயநிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளது என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரச கொள்கைக்கு சவால் விடுபவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் என பல்வேறு தரப்பினர் அரச தரப்பால் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சிறுபான்மையினத்தினர் மற்றும் அவர்களின் மத நிலைபாடுகளுக்கு எதிராக தமது கொள்கைகளை தீவிரப்படுத்துவதுடன் யுத்தகால அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்போர் மீதான அடக்குமுறைகளும் அதிகரிக்கும் எனவும் எனவும் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.


இந்நிலையில் ராஜபக்ஷக்களின் ஆட்சி உள்ளவரை இழைக்கப்பட்ட யுத்தக்குற்றங்களிற்கு நீதி வேண்டுமென்ற பேச்சுக்கு இனி இடமே இருக்காது. அது செவிடன் காதில் ஊதிய சங்குபோலவே இனி இருக்கும்.


சவால்களின் மூலம் தான் உண்மையான வெற்றி பிறக்கிறது. போரைவெல்வது, கொவிட் 19 இன் நோயை வென்றது மற்றும் இது போன்ற மிக வெற்றிகரமான தேர்தலை நடத்துவது நம்நாட்டின் பலத்தையும் மக்களின் பலத்தையும் உலகுக்குக் காண்பிக்கும் என தனது தேர்தல் வெற்றியுரையில் முழக்கமிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சர்வதேசத்தின் அழுத்தங்களிற்கு இனி கட்டுப்படுவாரா அல்லது செவிமடுப்பாரா, இல்லையா என்பதை அதில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்நிலையில், மீண்டுமொரு சர்வதிகார அடக்குமுறை ஆட்சியை எதிர்நோக்கியுள்ள இலங்கைத்தீவில் சிறுபான்மையினரின் பாதுகாப்பும் இருப்பும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

அதிகாரங்களுக்கும் பதவிகளுக்குமாக உள்ளுக்குள்ளேயே பிளவுபடுவதை விடுத்து இந்த ஆபத்தான நிலையில் அனைவரும் ஒன்றுதிரண்டு ஒரு பலமிக்க சக்தியை ராஜபக்ஷக்களுக்கு எதிராக ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

கொள்கைகள் கோட்பாடுகள் புனிதமானவையே, ஆனால் சில சமயங்களில் ஐக்கியமே மிகப் பொருத்தமான புனிதத்துவத்தை ஏற்படுத்தும். தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்ட கட்சிகள் ஐக்கியப்படுதல் அவசியம். அதுவே மீண்டும் உருவாகியுள்ள அடக்குமுறை பீதியைப்போக்குவதுடன் மாபெரும் எதிர்ப்பு சக்கிதியாகவும் மாறும்.





# சர்ச்சைக்குரிய கொடிகளும் பௌத்த சிங்கள பேரினவாதமும்

**இனியவன்**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் கடைப்பிடிக்காத பௌத்தசிங்களபேரினவாத கொள்கையை ராஜபக்ஷவினரின் குடும்ப அரசாங்கம் கடைப்பிடிக்கின்றமையை அதன்தொடர்ச்சியானசெயற்பாடுகளும், பிரதிபலிப்புக்களும் வெளிப்படுத்தி வருகின்றன.

தன்னை ஒரு “யுக புருசராக” காண்பிக்கும்கோத்தாபயராஜபக்ஷபௌத்த, சிங்கள பேரினவாத சிந்தனையிலும் தன்னை விஞ்சிய அரச தலைவர் இருந்துவிடவே கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றார்.

பிரதமராக இருக்கும் மஹிந்தவின் அடிநாதமும் பௌத்த,சிங்கள பேரினவாதமாகவே இருக்கின்றது. ஆகவே தம்பியின் பெயரால் அவரும் அந்த சித்தாந்தத்தினையே செவ்வனே முன்னெடுப்பதற்கு உறுதுணையாக இருக்கின்றார்.

இவ்வாறு தான் உண்மையான நிலைமை காணப்படுகையில், ஆட்சியில்அமர்ந்துள்ளராஜபக்ஷவினா, பல்லின இலங்கையில் அனைவருக்கும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தினை மையப்படுத்தி செயற்படுவதாக மேடைகளில் முழக்கமிடுகின்றனர்.

போர்க்குற்றங்கள், இனப்பிரச்சினை தீர்வு என்று பேசிக்கொண்டிருக்காது நடைமுறைச்சாத்தியமான விடயங்களை முன்னெடுப்பதற்கு தம்முடன் முற்போக்காக அணி திரளுமாறும் கோருகின்றார்கள்.

ஆனால் 70வருடங்களாக போராடி வரும் தமிழினம் தனது உரிமைக் கோரிக்கைகளையும், கொள்கைகளையும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் ராஜபக்ஷ தரப்பு தாம் பௌத்த சிங்கள பேரினவாத கொள்கையில் சிறு விட்டுக்கொடுப்பினை செய்வதற்கு தயாராக இல்லை. மாறாக அதனை மென்மேலும் வலுப்படுத்திக் கொண்டு செல்ல முடியும் என்பதையே சிந்தனையாக கொள்கின்றனர்.

இதற்கு ராஜபக்ஷவினரின் கைகளுக்கு ஆட்சி சென்றதும் முன்னெடுக்கப்பட்ட சில சம்பவங்களை மீட்டிப் பார்ப்பது பொருத்தமானதாகவே இருக்கும். அதுமட்டுமன்றி ஒவ்வெரு விடயத்திலும்ராஜபக்ஷவினர்பௌத்த, சிங்கள, பேரினாத சித்தாந்தத்தில் எவ்வளவு தூரம் இறுக்கமாக இருக்கின்றாகள் என்பதும் அப்பட்டமாக உணரக்கூடியதாகவே உள்ளது.

இலங்கையின் ஆட்சிப்பீடத்திற்கு தெரிவாகும் ஜனாதிபதிகள் கடந்த காலங்கில் தேர்தல் வெற்றிக்கு பின்பு பதவியேற்பு வைபவங்களை அல்லது அமைச்சர்களுக்கான நியமனங்கள் வழங்குவதனை ஜனாதிபதி செயலகத்தில் அல்லது அலரி மாளிகையில் நடாத்துவதே வழமையாக இருக்கின்றது.

ஆனால் வழமைக்கு மாறாக ராஜபக்ஷவினர் தங்களது பதவி ஏற்பு நிகழ்வுகளையும், ஆட்சி அதிகாரகட்டமைப்பு நியமனங்களையும் பௌத்தமதத்தினை முழுமையாக பிரதிபலிக்கின்ற இடங்களிலும், போரியல் பின்னணியைச் சார்ந்த தளங்களிலும் தான் நடத்தி வருகின்றனர்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அநுராதபுரம் ருவன்வெலிசாய பௌத்த விகாரையில் பதவி பிரமாணம் செய்து கொண்டார். பௌத்த மக்களின் மிகவும் நம்பிக்கைக்குரிய வழிபாட்டு தலமான ருவன்வெலிசாயவிலேயே புத்த பகவான் ஞானம் பெற்றதாகக் கூறப்படும் வெள்ளரசு மரம் உள்ளது. மட்டுமன்றி இலங்கையின் தலைநகராக ஒரு காலத்தில் விளங்கிய அநுராதபுரத்திலேயே சிங்கள மன்னர்கள் தமது ஆட்சியை வெற்றிகரமாக முன்னெடுத்தனர்.

மிகச்சிறந்த ஆட்சி முறையை முன்னெடுப்பதற்கும், பௌத்தர்களின் மனதில் இடம்பிடிக்கவுமே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அவ்விடத்தை தேர்ந்தெடுத்தார். தமிழ் மன்னன் எல்லாளனை தோற்கடித்து அநுராதபுரத்தை கைப்பற்றியவன் மன்னன் துட்டகைமுனு. இராணுவ வீரரான ஜனாதிபதி, அந்த சம்பவத்தை பௌத்தர்கள் மனதில் பதிய வைப்பதற்கும் இதை தேர்ந்தெடுத்திருக்கலாம் என சில பத்திரிகைகள் அப்போது கருத்து வெளியிட்டிருந்தன.

அதே போன்று இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் விருப்பு வாக்கில் சாதனை படைத்த ஜனாதிபதியின் சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ, கடந்த 9 ஆம் திகதி களனி ரஜமகாவிகாரையில் பதவி பிரமாணம் செய்து கொண்டார். இலங்கைக்கு புத்தர் வருகை இடங்களில் களனி முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. இதுவும் பௌத்தர்கள் புனிதமாக கருதும் இடமாக உள்ளது.

இதையடுத்து புதிய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்கும் நிகழ்வு வரலாற்று முக்கியத்துவமிக்க கண்டி ஸ்ரீதலதா மாளிகை வளாகத்தில் உள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி முன்னிலையில் இடம்பெற்றது. கண்டியின் உடரட்ட பாரம்பரியத்தின் இராஜதானியாக இந்த மண்டபம் முக்கியத்துவம் பெறுகிறது.

கண்டியை ஆண்ட கடைசி தமிழ் மன்னனை ஆங்கிலேயர்களிடம் சிக்க வைத்த, சிங்களபிரதானிகளுக்கும்ஆங்கிலேயர்களுக்குமிடையிலான கண்டி ஒப்பந்தம் இந்த மண்டபத்திலேயே 1815ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது என்பது முக்கிய விடயம். இந்த பதவிப்பிரமாண வைபவங்கள் எல்லாமே ஏதோ ஒரு விதத்தில் பெரும்பான்மை இனத்தவரின் மேலாதிக்கத்தை உணர்த்தும் இடங்களாகவே விளங்குகின்றன.

அத்துடன் தலதா மாளிகையில் நடைபெற்ற அமைச்சர்களுக்கான பதவியேற்பு வைபவமானது போயா தினத்தில் நடைபெறுகின்ற பௌத்த மத அனுஸ்டானம் போல காட்சியளித்தது. அதாவது ஆரம்ப நிகழ்வில் பௌத்தபிக்குகள்நீண்டநேரம்பௌத்த சமய நிகழ்வுகளை நிகழ்த்தியதன் பின்பே பதவியேற்பு நடைபெற்றது. இதில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ தலைவர்கள் அழைக்கப்பட்டிருக்கவும் இல்லை.

ஆகவே ஏன் இங்கு இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன என்பதை சிலாகித்து கூற வேண்டிய அவசியமில்லை. எனினும் கண்டியில் இடம்பெற்றபதவிபிரமாணநிகழ்வில்இடம்பெற்ற சில சம்பவங்கள் ராஜபக்ஷவினரின் பௌத்த சிங்களவாதத்தின் உட்கிடக்கையை புடம்போட்டு காண்பிப்பதாக உள்ளது.

முக்கியமாககண்டிநகரானதுபதவி பிரமாண நிகழ்வுகளுக்காக அலங்கரிக்கப்பட்டிருந்தது. எனினும் தேசிய கொடியை கண்ணுற்றவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. மேற்படி கொடியில் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களை குறிக்கும் பச்சை மற்றும் மஞ்சள் நிறங்கள் அகற்றப்பட்ட தனி சிங்கள கொடிகளே பறக்க விடப்பட்டிருந்தன.

இது ஆரம்பத்தில் எவராலும் கவனிக்கப்படவில்லையானாலும் பின்பு சமூக ஊடகங்களில் இது குறித்து கடும் விமர்சனங்கள் பெரும்பான்மையினரின் மத்தியிலும் வெளிப்படத் தொடங்கின. எனினும் பின்னர் கண்டி மாநகர சபை ஆளுநர் இக்கொடிகள் அகற்றப்பட்டதாக தெரிவித்திருந்தார். தேசிய கொடி என்பது நாட்டு மக்கள் அனைவரும் மதிக்கும் உயரிய சின்னமாகும்.

இவ்வாறான தேசிய கொடிகள் கண்டி நகரெங்கும் பறக்க விடப்படுவதற்கு முன்னர் அது குறித்து கண்டி மாநகர சபையினர் எவரும் கவனித்திருக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு முன்பதாக இவ்வாறான கொடிகளை வைத்திருந்தோர் மற்றும் அதை உபயோகப்படுத்தியோருக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டிருந்தமை முக்கிய விடயம். எனினும் கண்டி சம்பவத்தில் அந்த கொடிகளை இறக்கியதோடு விவகாரத்தை மூடி மறைத்து விட்டனர்.

எனினும் சில தரப்பினர் அந்தக் கொடிகளைகண்டி இராசதானிக்குரிய கொடி என்று நியாயம் கூறுகின்றார்கள். அவ்வாறே இருந்தாலும் தேசிய வைபவம் ஒன்றில் இதுவரை ஏற்றப்படாத ஒரு இராசதானிக்குரிய கொடியினை ஏன் ஏற்றவேண்டும் என்பது தான் கேள்வியாகும்.

ஆனால் ராஜபக்ஷவினரின் ஆட்சிக்கு அடிநாதமாக இருக்கும் பொது பலசேனா போன்ற சிங்கள இனவாதக் குழுக்கள் கடந்த காலங்களில் தேசியக்கொடியில் உள்ள முஸ்லிம், தமிழ் மக்களை குறிக்கின்ற பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்களை அகற்றவேண்டும் என்றுகோரிக்கைவிடுத்துவருகின்றனர்.

இந்தப் பின்னணியில் பார்க்கின்ற போது சர்ச்சைக்குரிய கொடி அரசின் தேசியவைபவமொன்றில்ஏற்றப்பட்டதானது பௌத்த சிங்கள இனவாதிகளை திருப்திப்படுத்துவதற்கானதா அல்லது எதிர்காலத்தில் இனவாதிகளின் விருப்பத்துக்கு ஏற்ப கொடியில் மாற்றம் செய்வதற்கான ஒத்திகையா என்ற சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

ஆக மொத்தத்தில் அடுத்த ஐந்து வருட ஆட்சி பௌத்த, சிங்கள பேரினவாத சிதத்தாந்தத்தினை உரமூட்டுவதற்கான அதிகாரங்களை கொண்டது என்பதையே தற்போதைக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

> **வழமைக்கு மாறாக ராஜபக்ஷவினர் தங்களது பதவி ஏற்பு நிகழ்வுகளையும், ஆட்சி அதிகாரகட்டமைப்பு நியமனங்களையும் பௌத்தமதத்தினை முழுமையாக பிரதிபலிக்கின்ற இடங்களிலும், போரியல் பின்னணியைச் சார்ந்த தளங்களிலும் தான் நடத்தி வருகின்றனர்.**

# வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பொறுப்பைத் துறக்கும் ராஜபக்ஷ குடும்பம்

**சுதர்சினி**

> **‘தமிழினத்தின் ஒன்றுபடலும், சர்வதேசத்தின் தலையீடுமே நீதியை பெறுவதற்கு வழிசமைக்கும்’**

தமிழர் தாயகத்தில், முன்னெடுக்கப்பட்ட தமிழின விடுதலைக்கான பயணத்தின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் திட்டமிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது வரையில் உறுதிப்படுத்தப்பட்டதாக இல்லை.

அவ்வாறிருக்க, தங்களது, பிள்ளைகள், கணவர், சகோதரர் என்று அன்புக்குரியவர்களை தொலைத்து விட்டு ஆண்டுகள் பல கடந்தும் அல்லல்களுக்கு மத்தியில் சிறிலங்காத் தீவு முழுவதும் தேடியலைந்து கொண்டிருக்கின்றார்கள் அவர்களின் சொந்தங்கள். ஆனால் தற்போது வரையில் அன்புக்குரியவர்களை தேடி அலைந்து கொண்டிருக்கும் உறவுகளுக்கு கிடைத்தது வெறும் ஏமாற்றமே.

கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய வெற்றி பெற்றதும், அதன் பின்னர் ஆகஸ்ட் ஐந்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ராஜபக்ஷவினரின் ஆட்சிக்கு மூன்றிலிரண்டு பலத்தினை பெருந்தேசிய வாதிகள் அளித்துள்ளமையும் நீதிக்கான போராட்டத்தினை முற்றுமுழுதாக முடக்கும் நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது.

இத்தகையதொரு பின்னணியில் வழமை போலவே சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தினம் இம்மாதம் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இத்தினைத்தில்வடக்கு, கிழக்கில் தனித்தனியாக இரண்டு மாபெரும் கவனயீர்ப்பு போராட்டங்களை மேற்கொள்வதற்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த போராட்டத்திற்கான அறிவிப்பினை அந்த உறவுகள் பகிரங்கமாக தெரிவித்துள்ளதோடு அதற்காக பேதமின்றி அனைத்து தரப்புக்களையும் ஆதரவு நல்குமாறு கோரிநிற்கின்றார்கள். அரசியல் ரீதியாக பிரிந்து நிற்கும் தரப்புக்களும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை பிளவுபடுத்தி வைத்திருக்கும் தரப்புக்களும் இந்த உறவுகளின் பகிரங்க கோரிக்கையை ஏற்று ஓரணியில் திரள்வார்களா என்ற வினா இங்கு மேலெழுகின்றது.

அதுமட்டுமன்றி, கடந்த மே மாதம் 18ஆம்திகதி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முறையாக அனுஷ்டிக்கவிடாது பல்வேறு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி சிறிலங்கா படைகளும், புலனாய்வாளர்களும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தினை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு நிச்சயமாக இடமளிக்க மாட்டார்கள்.

அதற்கு கட்டியங்கூறும் நடவடிக்கையாகவே அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் அலுவலகத்தின்பெயர்பலகையை தகர்த்து, அதில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் தலைவிக்கு எச்சரிக்கை பிரசுரமும் ஒட்டப்பட்டிருக்கின்றது.

இதையொத்த நிலைமைகள், அல்லது இதனைவிடவும் கடுமையான நிலைமைகளே முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் இருக்கப்போகின்றது என்பதை தற்போதே உய்த்தறிந்துவிட முடிகின்றது. அதேநேரம், யாழிலும், மன்னாரிலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், வவுனியாவிலும், கெடுபிடிகள் இருக்காது என்று சொல்வதற்கில்லை.

ஆனால்அத்தனைகெடுப்பிடிகளையும் தாண்டி தமது அன்புக்குரிய சொந்தங்களை கண்டுபிடித்து தருமாறு உறவுகள் வலியுறுத்துவதில் பின்நிற்கப்போவதில்லை. சுற்றிவளைப்பின் பேராலும், விசாரணைகளின் பேராலும் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் ஆயிரமாயிரம்பேர். இதனை விடவும், சரணடைந்தவர்கள், சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்கள் என்று பட்டியல் நீண்டு செல்கின்றது.

இவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது என்பதே தற்போது அவர்களின் உறவினர்களின் கோரிக்கையாக இருக்கின்றது. சிறிலங்காவை மாறிமாறி ஆட்சி செய்த அனைத்து தலைவர்களும் இதற்கான பதிலை வழங்க வேண்டிய பொறுப்பிலிருந்து விலகி நிற்க முடியாது என்பது வெளிப்படையான விடயம்.

அதிலும், குறிப்பாக, 2005ஆம் ஆண்டு ஆட்சிப்பீடமேறிய ராஜபக்ஷவினர் இந்த விடயத்தினை தட்டிக் கழிக்கவே முடியாது. ஜனாதிபதியாக மஹிந்தவும், பாதுகாப்புச் செயலாளராக கோத்தபாயவும் இருந்த சந்தர்ப்பத்திலேயே அதிகளவு காணாமலாக்கப்பட்ட சம்பங்கள் அரங்கேறின. வெள்ளைவான் கடத்தல்கள் இடம்பெற்றன.

சிறிலங்கா படைகளிடத்தில் நேரடியாக சரணடைந்தவர்கள் இருகின்றார்கள். ஆனால் இவர்களுக்கு எல்லாம் என்ன நடந்தது என்று பகிரங்கமாக கோருகின்ற போது ராஜபக்ஷ அரசு சினமடைகிறது. கேள்வி கேட்பவர்களையும், கவனயீர்ப்புக்களை செய்கின்றவர்களையும் நசுக்க முனைகின்றதே தவிர உரிய பதில் அளிப்பதற்கு திராணியில்லாத நிலையிலேயே உள்ளது.

தற்போது பாதுகாப்புச்செயலாளர்ஜனாதிபதி ஆசனத்திலும், ஜனாதிபதி பிரதமர் ஆசனத்திலும் இருக்கின்ற நிலையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான உரிய பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கின்றது. இதிலிருந்து அவர்கள் விலகி நின்றுவிட முடியாது.

எனினும், ராஜபக்ஷ சகோதரர்கள் இந்த விடயத்தினை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதற்கே விரும்பாத நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களை தேடி அலையும் சொந்தங்களை வீடுகளுக்குள் முடக்கி காணாமலாக்கப்பட்டவர்களுக்கான மரணச் சான்றுதழை திணித்து தப்பிபிழைத்துக் கொள்ளவே திட்டம் தீட்டி வருகின்றன.

அதாவது, இறுதிப்போரினை வழிநடத்தி சரணடைந்தவர்கள் உட்பட பல் ஆயிரக் கணக்கானவர்கள் காணாமல் போவதற்கு ஆணிவேராக இருக்கும் ராஜபக்ஷவினர் சகலதையும் மறந்து முன்னோக்கி செல்வோம் என்றும், தென்னிலங்கையிலும் பலர் காணாமலாக்கப்பட்டனர் என்று பிடிச்சிராவித்தன நியாயம் கற்பிக்க விளைகின்றனர். அத்துடன்தங்களுடைய பொறுப்பினை தட்டிக்கழித்து ‘பொறுப்பு துறப்பினை’ செய்யவே முனைகின்றனர்.

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் அதுமட்டுமன்றி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின்விடயத்திற்குதீர்வளிப்பதற்கு காலம் கடத்துவதற்குரிய சூட்சுமங்களையே சிங்களத் தலைவர்கள் முன்னெடுப்பது வழமையானதொரு விடயமாகும்.

2004-இல் சந்திரிக்கா அம்மையாரால் அதிபர் செயலக ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷவினால் 2011இல் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, 2013-இல் பரணகம ஆணைக்குழு ஆகியன உருவாக்கப்பட்டன. பின்னர் மைத்திரி-ரணில் கூட்டு அரசில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம், காணாலாக்கப்பட்ட உறவுகளின் எதிர்ப்பு மத்தியில் உருவாக்கப்பட்டது.

ஆனால் இவையாவும் சிங்கள சார்பு நிலை உள்ளக நீதி நிறுவனங்களாகச் செயற்பட்டனவே தவிரவும் உறவுகளைத தேடும் சொந்தங்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கவில்லை, தற்போதைய சூழலில் அவை பெற்றுக்கொடுக்கப் போவதுமில்லை என்பது வெளிப்பட்டாகிவிட்டது.

ஆகவே நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரேவழியாக இருப்பது சர்வதேசத்தின் தலையீடாகும். அதுமட்டுமன்றி தமிழர் தயாகத்தில் இருக்கும் அனைத்து தரப்புக்களும் ஒன்றிணைந்து அதற்கான வலியுறுத்தல்களை செய்ய வேண்டும். புலம்பெயர்ந்த சொந்தங்கள் அதற்குரிய உந்துதலையும், அழுத்தங்களையும் முறையாக பிரயோக்க வேண்டும்.

அதனை விடுத்து திட்டமிட்ட காலதாமதங்கள் ஊடாக உறவுகளை தேடுபவர்களை உடல் உள ரீதியாக பலவீனப்படுத்தி உயிரிழக்க வைக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றன. மேலும் தமிழ்த் தேசிய தளத்தில் உள்ள அரசியல் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்யும் வகையில் காணப்படுவதாக இல்லை. தமது சுயலாப அரசியல் நலன்களுக்காக காணாமலாக்கப்படுபவர்களினது விடயத்தினை பயன்படுத்தப்படும் சூழலொன்று தோன்றியுள்ளது.

இந்த நிலைமை உடன் மாற்றமடைந்து அந்தப்பிரதிநிதிகள் பொறுப்புக்கூற வேண்டிய புதிய அரசாங்கத்தின் மீது பாரிய அழுத்தங்களை பிரயோகித்து சர்வதேசத்தின் பங்களிப்புடனான நீதிப்பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

இந்தச் செயற்பாடுகளில் ஏற்படும் தாமதங்களுக்கு ஒரே தீர்வாக இருப்பது சர்வதேச விசாரணையே ஆகும். ஆயினும் சர்வதேச, நாடுகளும், அமைப்புக்களும், நிறுவனங்களும், நாளாந்தம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கும் சூழல் தோன்றுவதால் அவற்றின் மீதுன நம்பிக்கையும்படிப்படியாககுறையும்நிலையே ஏற்பட்டுள்ளது.

ஆகவே எந்தவிதமான தமதங்களும் இன்றி நீதி நிலைநாட்டப்பட வேண்டும். நீதி வழங்களில் ஏற்படும் தாமதங்கள் தமது அன்புக்குரியவர்களைத் தேடும் உறவுகளின் மரணத்திற்கு அடிப்படையாக அமையும். அதன் விளைவுகளும் புறக்கணிப்பும் தமிழ் இனத்தின் எதிர்கால சந்ததியின் அகிம்சை மீதான நம்பிக்கையை கேள்விக்குறியாக்கும்.

ஆகவே சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்தினுடனான விரைவான நீதிப்பொறிமுறை அமைக்கப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்காக போராடும் சொந்தங்களுக்கான நீதி வழக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாத நிலைமை நீடிக்குமாயின் தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமனாகிவிடும். ■






நமது ஈழநாடு
www.namathueelanadu.com



# Brexit இன் பின்னர் ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகள் பிரித்தானியாவில் குடியேறுதல் (EU Settlement Scheme) தொடர்பாக அறிந்திருக்க வேண்டியவை



சட்ட ஆலோசகர்
**கீத் குலசேகரம்**
(LLB (Hons), PGDip, GCILEx)




*31 ஜனவரி 2020* அன்று பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறி விட்டது. எனவே, பிரித்தானியாவில் வசித்து வரும் ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகள் (EU, EEA, Swiss citizens) மற்றும் அவர்களின் ஏனைய நாட்டு குடும்ப அங்கத்தவர்கள் (Non EEA family members) பிரித்தானியாவில் தொடர்ந்து வசிக்க விரும்பினால், EU Settlement Scheme (EUSS) என்ற புதிய நடைமுறையின் கீழ் பிரித்தானிய வதிவிட விண்ணப்பத்துக்கு, *30 யூன் 2021* இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவேண்டும்.

இந்த விண்ணப்பத்தனை மேற்கொள்பவர் *31 டிசம்பர் 2020* இல் அல்லது இதற்கு முன்னதாக பிரித்தானியாவில் வசிப்பவராக இருக்கவேண்டும். விதிவிலக்காக, இந்தத் தினத்துக்குள் பிரித்தானியாவில் இல்லாத ஐரோப்பிய ஒன்றிய குடிமகனின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் இதில் விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கும். உதாரணமாக, அந்தத் திகதியில் அல்லது அதற்கு முன்பிருந்தே குடும்பரீதியான உறவு நீடித்திருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கமுடியும்.

பொதுவில், பிரித்தானியாவில் தொடர்ந்தும் வசித்து வேலை செய்ய/கல்வி கற்க விரும்பும் அனைத்து ஐரோப்பிய ஒன்றிய குடிமக்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள்/தங்கி வாழ்பவர்களுக்கும் இந்தத் திட்டம் பொருந்தும்.

நிரந்தர வதிவிட அட்டை (Permanent Residence Card) அல்லது வதிவிட அட்டை (Residence Card) அல்லது வேறு மூலத்தை அடிப்படையாகக் கொண்ட வதிவிட அட்டை (Derivative Residence Card) வைத்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகளும் கூட இந்தத் திட்டத்தின் கீழ் கண்டிப்பாக விண்ணப்பிக்க வேண்டும்.

Indefinite leave to enter the UK, Indefinite leave to remain in the UK மற்றும் பிரித்தானிய அல்லது ஐரிஸ் குடியுரிமை கொண்டோர் (இரட்டைக் குடியுரிமை உட்பட) இதற்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை.

*30 யூன் 2021* வரை நீங்கள் தற்போது கொண்டுள்ள அந்தஸ்து மற்றும் உரிமைகள் தொடர்ந்தும் இருக்கும். அதன்பின்னர் தொடர்ந்து வசிப்பதற்கு அல்லது வேலை செய்வதற்கு நீங்கள் இப்புதிய திட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருக்கவேண்டும். இந்த விண்ணப்பங்களை மேற்கொள்பவர்களுக்கு settled status அல்லது pre-settled status வழங்கப்படும்.

Pre-Settled status:

- ♦ இதற்குத் தகுதிபெறுவதற்கு கடந்த ஆறு மாதங்களில் ஒரு நாள் பிரித்தானியாவில் வசித்திருந்தால் போதுமானதாகும். இந்த அந்தஸ்து ஐந்து வருட காலத்திற்கு வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் நீங்கள் நிரந்தர வதிவுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்,

Settled status:

- ♦ நிரந்தர வதிவுரிமையைப் போன்றது. இதற்கு தொடரான ஐந்து வருடங்களில் ஒருவருடத்திற்கு ஆறு மாதங்கள் என்ற அடிப்படையில் பிரித்தானியாவில் வசித்திருக்கவேண்டும். இது கடைசி ஐந்து வருடங்களாக இருக்கவேண்டும் என்றில்லை. வேறு தொடர்ச்சியான ஐந்து வருட காலப்பகுதியாகவும் இருக்கலாம். ஆனால் அதிலிருந்து தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் பிரித்தானியாவுக்கு வெளியே வசித்தவராக இருக்கமுடியாது. இந்த அந்தஸ்த்துக் கிடைத்து ஒரு வருடத்தின் பின்னர் பிரித்தானியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.

Settled **மற்றும்** Pre-Settled **ஆகிய இரண்டு அந்தஸ்துக்களுடனும் நீங்கள்:**

- ♦ ஐக்கிய இராட்சியத்தில் வேலை செய்யலாம்,
- ♦ தற்போது நீங்கள் பயன்படுத்துவதைப்போல NHS இனை இலவசமாகப் பயன்படுத்தலாம்,
- ♦ கல்விச் செயற்பாட்டில் இணைந்து கொள்ளலாம் அல்லது தொடர்ந்து கல்வி கற்கலாம்,
- ♦ தகுதியுடையோர் நிதிசார் உதவிகள் மற்றும் ஓய்வூதியம் போன்ற அரசாங்க நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்,
- ♦ ஐக்கிய இராட்சியத்திற்குள் உள்ளேயும் வெளியேயும் பயணிக்கலாம்.

**பிரித்தானியாவில் நிரந்தர வதிவுரிமை** (permanent residence) **வைத்திருக்கும் ஐரோப்பிய பிரஜைகள்:**

**உங்களிடம் பிரித்தானியாவின் செல்லுபடியான நிரந்தர வதிவிட ஆவணம் இருந்தால் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்று இருக்கும்:**

- ♦ நீல நிற வதிவிட ஆவணத்தினுள்ளே ஒரு சான்றிதழ் (சுவிஸ் நாட்டவராயின் இளஞ்சிவப்பு (pink) நிறத்தில் இருக்கும்)
- ♦ கடவுச்சீட்டின் உள்ளே ஓர் சான்றிதழ் நிரந்தர வதிவிட அனுமதியை உறுதிப்படுத்தும் biometric residence card (EU, EEA அல்லது சுவிஸ் நாட்டவர் அல்லாத ஒருவரிடமே இது இருக்கும்)
- ♦ EU, EEA அல்லது சுவிஸ் நாட்டவர்களின் நிரந்தரவதிவிட ஆவணத்தில் Document Certifying Permanent Residence (நிரந்தர வதிவுரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம்) என இருக்கும். (உங்களுடைய ஆவணத்தில் registration certificate எனப் பதிவிடப்பட்டிருந்தால் அது நிரந்தர வதிவிட ஆவணம் இல்லை.)



**நீங்கள் 30 யூன் 2021 இற்கு பின்னர் பிரித்தானியாவில் தொடர்ந்து வசிக்க விரும்பினால்:**

- ♦ ஐரோப்பிய ஒன்றிய குடியேற்றத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க வேண்டும் - இதற்கு நீங்கள் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வசித்திருக்கவேண்டும் என்பதை நிருபிக்கவேண்டிய தேவையில்லை. அல்லது
  - ♦ *30 யூன் 2021* இற்கு முன்னதாக குடியுரிமைக்கு (citizenship) விண்ணப்பிக்க வேண்டும்

**பிரித்தானியாவில் காலவரையறையின்றிய உள்நுழைவு அல்லது தங்குவதற்கான அனுமதி** (indefinite leave to enter or remain) **வைத்திருப்பவர்கள்:**

Indefinite leave to enter or remain (ILR) **இற்கான விண்ணப்பத்தினை நீங்கள் மேற்கொண்டிருந்தால்:**

- ♦ உங்கள் கடவுச்சீட்டில் ஓர் முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும் அல்லது உள்விவகார அலுவலகத்தின் கடிதம் இருக்கும்.
- ♦ விக்னெட் (vignette) ஸ்ரிக்கர் அல்லது பயோமெற்றிக் வதிவிட அனுமதி (biometric residence permit) கூட இருக்கலாம்
- ♦ அவ்வாறாயின் இப்புதிய திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்காமல் நீங்கள் பிரித்தானியாவில் தொடந்தும் வசிக்கலாம்.

எனினும் நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்யும் பட்சத்தில் இப்புதிய திட்டத்தின் (EU Settlement Scheme) கீழ் உங்களுக்கு indefinite leave to remain வழங்கப்படும். இது settled status எனப்படும். இதற்கு தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் வசித்திருக்கவேண்டும் என நிருபிக்கத் தேவையில்லை.

**புதிய திட்டத்தின் கீழ்** settled status **இனைப் பெற்றுக்கொண்டால்:**

- ♦ நீங்கள் உங்களுடைய குடியேற்ற அந்தஸ்தினை இழக்காமல் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் பிரித்தானியாவுக்கு வெளியே செலவிடக் கூடியதாக இருக்கும் (தற்போதுள்ள indefinite leave to remain இன் கீழ் இரண்டு வருடங்கள் மட்டுமே செலவிடமுடியும்).
- ♦ சுவிஸ் நாட்டவர் அல்லது அத்தகையவரின் குடும்ப அங்கத்தவராயின் உங்களுடைய குடியேற்ற அந்தஸ்தினை இழக்காமல் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் வரை பிரித்தானியாவுக்கு வெளியே செலவிடக்கூடியதாக இருக்கும்.
- ♦ Settled status இனைக் கொண்டுள்ளவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பிரித்தானியக் குடியுரிமையினைப் பெற்றுக்கொள்வர்.

**புதிய திட்டத்தின் கீழ்** Pre-Settled **இனைப் பெற்றுக்கொண்டால்:**

- ♦ நீங்கள் உங்களுடைய குடியேற்ற அந்தஸ்தினை இழக்காமல் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் வரை பிரித்தானியாவுக்கு வெளியே செலவிடலாம். settled status இற்கு தகுதி பெற உங்களுடைய தொடர்ச்சியான வதிவினைப் பேணிக்கொள்ளவேண்டும்.
- ♦ Pre-settled status இனைக் கொண்டுள்ளவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அதே Pre-settled status வழங்கப்படும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இதயத்தில் தீ மூட்டிய

ச.புரட்சிமாறன்

வீமன் தனது அணியை அழைத்துக் கொண்டு எம்.ஐ.-24 ரக உலங்கு வானூர்தி தரிப்பிடம் நோக்கி முன்னேறினான். இளங்கோ மற்றைய அணியை அழைத்துக் கொண்டு பிரதான விமானத்தரிப்பு கொட்டகையை நோக்கி ஓடினான். இளங்கோ தானும் சண்டையிட்டபடி அணியையும் வழிநடத்தினான். எந்தவித பதட்டமுமில்லாமல் மிகவும் தெளிவான முறையில் இளங்கோவின் குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. சண்டையென்றால்சோளம்பொரி சுவைப்பதுபோன்ற உணர்வவனிற்கு. பதட்டமென்றால் என்னவென்று இளங்கோ புத்தகத்தில் தான் படித்தறிய வேண்டும். அனுபவத்தில் அதைப்பற்றி அவனுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. எத்தனை சண்டைக் களங்களில் எதிரியைப் பந்தாடியவன். வன்னியில் நடந்த புகழ்பெற்ற சமர்களிலெல்லாம் அவனின் துப்பாக்கி முழங்கியிருக்கின்றது.

ஓயாத அலைகள் -3 நடவடிக்கையில் ஜெயசிக்குறுப் படையை விரட்டியடித்த பெருஞ்சமரில்ஒட்டுசுட்டானிலிருந்த கடகடாப் பாலத்தை சிங்களப் படைகளிடமிருந்து மீட்பதற்காக எதிரிப்படை மீது அதிரடியாய்ப் புகுந்து எதிரிகளை மண்ணில் புரளவைத்து கடகடாப் பாலத்தை எல்லோரும் வியக்கும்படி கைப்பற்றியவன் இந்த இளங்கோ.

இத்தாவில் சமர்க்களத்தில் பெண் போராளிகளின் நிலைகளை ஊடறுத்து உள்நுழைந்த கவசப்படை கவசவண்டிகள் மீது துணிகர தாக்குதலை மேற்கொண்டு ஒரு பவள் கவசவாகனத்தை மடக்கிப் பிடித்து அதிலிருந்த எதிரிமீது தாக்குதலைத் தொடுத்து மின்னல் வேகத்தில் அந்த பவள் கவச வாகனத்தில் பாய்ந்து ஏறி அதில் பூட்டப்பட்டிருந்த 50 கலிபர் துப்பாக்கியைக் கைப்பற்றி அதிலிருந்தபடியே எதிரியைத் தாக்கி பெரும் சாகசம் நிகழ்த்திய இளங்கோ, இந்தக் களத்திலா அசைந்து கொடுப்பான்?

அநுராதபுர படைத்தளம் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அதிர்ந்துகொண்டிருந்தது. பெரும் இறுமாப்போடு நீண்ட தடைகளையும் மண் அணைகளையும் காவல் நிலைகளையும் அமைத்துவிட்டு 'முடிந்தால் புலிகள் புகுந்து பார்க்கட்டும்' என்று நினைத்திருந்த எதிரிகளுக்கு 'முடிந்தால் தடுத்துப் பார்க்கட்டும்' என்ற சவா-லோடு கரும்புலிகள் விமானங்களை நோக்கி ஓடினார்கள். இந்த விமானங்கள் மீது எத்தனை கோவம் அவர்களுக்கிருந்தது. எங்கள் தாய் நிலத்தில் எங்கள் பிஞ்சுக் குழந்தைகள் தசைத் துண்டுகளாய் சிதறவும் எங்கள் தாக்குலம் ஓவென்று கதறி அழுவதற்கும் தினம் தினம் சாவின் வாடையே எங்கள் தாய்நிலத்தின் வாசல்களில் வீசுவதற்கும் கொடிய எதிரிக்கு உதவுவது இந்த விமானங்கள் தானே. இந்த விமானங்களை அழிப்பதால் சிதையப் போவது விமானங்கள் மட்டுமல்ல சிங்கள அரசினதும் அதன் படையினதும் ஆக்கிரமிப்பு ஆசை நிறைந்த போர்வெறிக் கனவுந்தான்.

சண்டை தொடங்கி கொஞ்ச நேரத்திற்குள் விமானத்தளத்தில் நின்ற விமானங்கள் பெருமோசையோடு வெடித்துச்சிதறிஎரிந்துகொண்டிருந்தன. தங்களைக் காக்கமுடியாத ஆற்றாமையோடு கரும்புலி வீரர்களுக்கு கட்டுப்பட்டு அவை கவனமாக சொன்னதைச் செய்யும் கிளிப்பிள்ளை போல எரிந்துகொண்டிருந்தன. அந்த விமானங்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள் எங்கள் தேசத்துப் புயல்களின் வீச்சில் அகப்பட்டு செத்து வீழ்ந்திருந்தார்கள். எஞ்சியோர் அந்தத் தளத்தை விட்டே ஓடித்தப்பினார்கள்.

அந்த விமானப் படைத்தளத்தின் ஓடுபாதையின் இடதுபுறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எம்.ஐ.  24 ரக உலங்கு வானூர்தியை நெருங்கிய வீமனின் அணி அந்த உலங்கு வானூர்தி மீது தாக்குதலைத் தொடுக்கின்றது. சிங்களப் படையின் பலம்மிக்க உலங்கு வானூர்தியான எம்.ஐ. -24 ஒன்று வெடித்துச் சிதறியபடி எரிந்துகொண்டிருக்கின்றது. மற்றைய எம். ஐ.-24 உலங்குவானூர்தி மீது தாக்குதல் தொடுத்தபோதும் அது சேதமாகிக் கொண்டே இருந்தது. பற்றி எரியவில்லை. அதன்மீது தொடர்ச்சியாக வீமனின் அணி தாக்குதலைத் தொடுத்தது. இந்தக் கணத்தில்சிங்களப்படையால்விமானத்தளத்தை நெருங்கவே முடியவில்லை. அவர்களின் கண்முன்னாலேயேஅவைவெடித்துபெரும் தீப்பிழம்பை வீசியபடியும் கரும்புகையை கக்கியபடியும் எரிந்துகொண்டிருந்தன.

மறுபக்கம் இளங்கோ பிரதான விமானத்தரிப்பு கொட்டகையை நோக்கி தனது மற்றைய அணியை சண்டையிட்டபடி நகர்த்தினான். அந்தக் கொட்டகைமீது கருவேந்தன் 'லோ' வால் தாக்க அங்கிருந்த விமானங்கள் தீப்பற்றத் தொடங்கின. அவர்கள் விமானக் கொட்டகையையும் ஓடுதளத்தில் தரித்து நின்ற விமானங்கள் மீதும் தாக்க அவையும் தீப்பற்றி எரியத் தொடங்கின.



அநுராதபுர வான்படைத்தளத்தினுள் எதிரியின் விமானங்களுக்குத் தங்கள் உடலில் சுமந்துவந்த வெடிபொருட்களால் தாக்கி அவை எரியும் காட்சியை ஆனந்தத்தோடு பார்த்தபடி நிலைமையை வன்னியிலுள்ள கட்டளைப் பீடத்திற்கு அறிவித்தான் இளங்கோ. 'என்னண்டா வீமனாக்கள்எம்.ஐ.-24 ஒண்டைஎரிச்சிட்டாங்கள். மற்றது தாக்கி சேதப்படுத்தியிருக்கு. அது எரியேல்ல. இஞ்சால என்ர பக்கம் ஒரு கே-8 விமானமும் இன்னுமொரு விமானத்தையும் ரண்வேயில தாக்கி எரிச்சிருக்கிறாம். பெரிய கங்கருக்குள்ள நிக்கிற விமானங்களுக்கு அடிச்சிருக்கிறம். தொடர்பில நில்லுங்கோ பாத்து அறிவிக்கிறன்.' கட்டளை மையத்திற்கு இளங்கோ நிலமைகளை தெரியப்படுத்திக்கொண்டிருக்கிறான்.

சண்டை தொடர்ந்துகொண்டிருந்தது. அந்த வான்படைத் தளத்துள் நடந்த தொடக்கச் சண்டையின்போது உள்ளிருந்த எதிரிகளின் தடைகளை தகர்த்தெறிந்து எழிலின்பன், பஞ்சசீலன், சுபேசன் ஆகியோர் தங்களுக்குத் தரப்பட்ட பணியை சரிவர நிறைவேற்றிய திருப்தியோடு வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

கரும்புலிகளின் நெஞ்சில் எரிந்த விடுதலைத் தீயின் ஒளிப்பிழம்புகள் அந்த விமானத் தளத்தை சுட்டெரித்துக் கொண்டிருந்தன. சிங்களப் படைகளால் துளியளவேனும் கரும்புலி வீரர்களின் தாக்குதலுக்குஈடுகொடுக்கமுடியவில்லை. அவர்கள் எத்தனைதான் முயன்றாலும் விமானத்தளம் கரும்புலி வீரர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. முன்னேறிய படையினர் அடித்துவிரட்டப்பட்டனர்.

சமாதானம் என்ற மாயையைக் காட்டி எங்கள் விடுதலைப்போரை சிதைத்துவிட சிங்கள தேசம் மும்முரமாக ஈடுபட்ட போது இவர்கள் எந்த நொடிப்பொழுதும் கரும்புலியாகி எதிரியின் குகைக்குள் புகுந்து பகைவனுக்குப் பெரும் சேதம் விளைவித்து தலைவனுக்கு பலம் சேர்க்க காத்திருந்தார்கள். தலைவரோடு கூடவிருந்து அவரின் சுமைகளை தாங்கியவர்கள். அந்த உணர்வோடுதான் எதிரியின் கற்பனைகளைச் சிதைத்துவிட்டு மீண்டும் இங்கு போர்மேகம் கருங்கொண்டபோது கரும்புலியாய் பிறப்பெடுத்தார்கள். தங்கள் இலக்கை அழித்தொழிக்கும் அந்த நாளுக்காக அவர்கள் எத்தனை இரவுகள் காத்திருந்தார்கள். அவர்களின் நெஞ்சில் பிறந்த விடுதலைப்பற்று இன்று அநுராதபுரத்து வான்படைத் தளத்தை சிதைத்துக்கொண்டிருந்தது.

அநுராதபுர வான்படைத்தளத்தின் மையத்தில்நின்றுவிமானத்தளத்தைதனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபடி விமானங்கள் நிற்கும் திசைகளுக்கு கரும்புலிகளை நகர்த்தினான் இளங்கோ. வீமன் மறுபுறத்தேநின்றபடிதனது அணியைவழிநடத்தினானான். இந்த வீரர்களை எதிர்த்துச் சமரிடும் திறன் சிங்களப் படைக்கு எங்கே இருக்கின்றது?

வீமன்தலைவருக்குநெருக்கமாகநின்று பணிபுரிந்தவன். தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மெய்க்காவலர் அணிக்குப் பொறுப்பாக நின்று செயற்பட்டவன். அந்தப் பெரு மனிதனின் மனதைப்புரிந்து அவரோடு இசைந்துபோய் அவரின் தேவைகளை நிறைவேற்றி கொடுப்பதில் வல்லவனாயிருந்தான் வீமன். ஆனால் பாதுகாப்பு நடைமுறைகளில் அவன் தளர்வு காட்டியதில்லை. தேசத்தின் குரல் பாலா அண்ணன் அவர்கள் இங்கு வந்தால் அவர் கேட்பது வீமனைத்தான். அத்தனை பற்றும் பாச உணர்வும் வீமனிடத்தே அவருக்கிருந்தது. அந்த வீமன்தான் இன்று அநுராதபுர வான்படைத்தளத்தை அதிரவைத்துக்கொண்டிருந்தான்.

தங்கள் தீரம் மிகு செயல்களால் விடுதலைப்போருக்கு பலம் சேர்த்த கரும்புலி வீரர்கள் சிலர் தங்கள் உடலோடு சுமந்துவந்த வெடிபொதியை வெடிக்கவைத்து தங்களை இந்த தேசத்திற்காக அர்ப்பணித்துக்கொண்டிருந்தனர். நெஞ்சிலே காயமடைந்தகாவலன்அணித்தலைவன்இளங்கோவிடம் அனுமதி பெற்றபின் தன்மார்போடு பொருத்தப்பட்டிருந்த கந்தகப் பொதியை வெடிக்கவைத்து காற்றோடு கலந்துபோனான்.

அநுராதபுரத்து வான்தளத்தில் அந்த வீரர்கள் மூட்டிய தீ பிரகாசித்து எரிந்து கொண்டிருந்தது. களத்தில் நின்றபடி அணியை வழிநடத்திய இளங்கோ காயமடைந்தான். அவனால் நகரமுடியவில்லை. தனது காயத்திற்கு கட்டுப்போட்டுவிட்டு அவன் தெளிவாக கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தான். அந்தக் கரும்புலிகளில் ஒருவரைத் தவிர மற்றைய எல்லோரும் எதிரியின் குண்டுமழையால் வீரவடுவேந்திய போதும் அவற்றிற்கு கட்டுப்போட்டுவிட்டு தொடர்ந்தும் சண்டையிட்டனர். காயங்களின் வேதனை அவர்களை வாட்டவில்லை. சிங்களம் எங்கள் தேசம் மீது புரிந்த கொடுமைகளின் வடுக்கள்தான் அவர்களின் மனதை வாட்டிக் கொண்டிருந்தது. அதற்காகத்தான் இன்று எதிரியின் கோட்டைக்குள் முழக்கமிட்டு கொண்டிருக்கிறார்கள்.

சிங்களப்படை மீண்டும் தங்கள் தளத்தை கைப்பற்ற முன்னேறுகிறார்கள். இளங்கோ கட்டளை மையத்துடன் தொடர்பெடுக்கிறான்.ஙுஙுஎன்னண்டா ட்ரக்கில வந்து இறங்கி அடிச்சுகொண்டு வாறாங்கள். நாங்கள் திருப்பித்தாக்கிறம். நீங்கள் உங்கட ஆக்களை வைச்சு நல்லா குடுங்கோ. எங்கட விமானங்கள் உங்களுக்கு துணையா இப்ப தாக்குதல் நடத்துவினம். இளங்கோ கட்டளை மையத்துடன்தொடர்பிலிருந்தான். திடீரென முகாமைச் சூழ இருந்த எதிரிகளின் ஆயுதங்கள் வான்நோக்கி குண்டு மழையைப்பொழிந்தன. உண்மையில் அப்போது வானத்தில் எமது விமானங்கள் தென்படவில்லை. எதிரியின் ராடார் திசையில் எமது விமானம் தென்படுவதாக தகவல் கிடைத்ததுமே பீதியால் கண்மண் தெரியாது சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால்அவர்களின் இந்த இரைச்சல்களுக் கூடாகவே விடுதலைப்புலிகளின் திறன்வாய்ந்த வானோடிகள் தங்களுக்கு தரப்பட்ட இலக்கின் மீதுகனகச்சிதமாககுண்டுகளைவீசிவிட்டு மீண்டும் தளம் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

அநுராதபுர வான்தளத்தில் தரையாலும் வானாலும் கரும்புலிகள் தொடுத்த தாக்குதலால் சிங்கள சிப்பாய்களும் அவர்களது அதிகாரிகளும் கதிகலங்கிப்போயினர். முன்னேறி வந்த சிங்களப்படையினர்எமதுவான்படையின்வரவைக்கேள்வியுற்றதுமே ஓடித்தப்பிக்கொண்டனர். இளங்கோ இந்த நிலைமையை விமானத் தளதின் மையத்திலிருந்தபடி கட்டளைப் பீடத்திற்கு அறிவித்தான்.

எதிரியின் இலக்குகளை தகர்த்துக் கொண்டிருந்த செந்தூரன் காயமடைந்தான். அவனால் இனி செயற்படமுடியாத அளவு பாரிய காயம். அவன் இன்று நிறையவே சாதித்துவிட்டான். அவன் மனதில் நிறைந்த திருப்தியிருந்தது. அவன் புகழ் மணியிடம் தனது உடலில் பொருத்தப்பட்ட வெடிகுண்டை இயக்கிவிடுபடி பணிக்கிறான். அந்த கணத்தில் கரும்புலி வீரர்களின் மனதில் எழுந்த உணர்வை எப்படிச்சொல்வது ? எத்தனை வருடங்களாக ஒன்றாக இருந்து ஒருவருக்கொருவர் துணையாக வாழ்ந்த வீரர்கள். இன்று பிரியப்போகிறார்கள். ஆனாலும் சாதித்து விட்டோம். என்ற பெருமிதத்தோடு அவனது சார்ச்சை இழுத்துவிட்டான் புகழ் மணி. சில கணங்களில்

தொடரும்





# மீண்டும் ஒரு பொறுப்புக் கூறலற்ற வரலாற்றுத் தவறை செய்து விடாதீர்கள்

யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற தேர்தலில் எந்த வகையிலாவது வெற்றி பெற வேண்டும் என போராடிய தமிழரசுக் கட்சி, அதே வெறித்தனத்தை முள்ளிவாய்க்காலில் அத்தனை கொடூரம் நடந்த போதும் செய்திருந்தால் இன்று நிலைமை மரியாதைக்குரியதாக இருந்திருக்கும். சரி, தான் விட்ட தவறை படுகொலை நடந்து பதினொரு வருடங்கள் கடந்தும் உணராமல் இருப்பதும் வேதனையே.

1976 மே மாதம் 14 ஆம் திகதி ஈழத் தமிழர்களுக்காக ஈழத் தந்தை எனப்படும் செல்வநாயகம் தலைமையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒன்றிணைந்து வட்டுக்கோட்டை எனும் தொகுதியில் வழகம்பரை அம்மன் கோவில் அருகில் மிக பிரமாண்ட அரங்கில் “தனித்தமிழீழக் கொள்கை”யை பிரகடனம் செய்தனர்.

அந்த தமிழ் கட்சிகளின் தலைவராகவும், தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் இருந்த தந்தை செல்வாவின் உசுப்பேத்தலால் தான் முப்பது வருடங்களாக இளைஞர் யுவதிகள் பலிக்கடா ஆக்கப் பட்டனர்.

அன்று முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்து கொண்டிருந்த போது, தமிழரசுக் கட்சியோடு இணைந்த கூட்டமைப்பு தங்களுக்கும் அதற்கும் சம்மந்தமே இல்லாதது போல நடந்து கொண்டார்கள்.

மனித உயிர்கள் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை கதிரைக்குப் பலியாக்கப்படும் வேள்விக்கடாக்கள். மனித உயிர்களைப் பற்றியே அக்கறை கொள்ளாத கட்சி மனித உணர்வுகளைப் புரிந்து கொள்ளப்போவதில்லை. எல்லாவற்றையுமே அரசியலுக்காக செய்யத் துணிந்தவர்கள்.

மீண்டும் மீண்டும் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அன்று தமிழரசுக் கட்சியின் உணர்ச்சி மிகுந்த புரட்சியால் இன்றுவரை ஐந்து லட்சம் தமிழர்கள் பலியாக்கப்பட்டுள்ளனர். இப்போதுள்ள தமிழ்க் கட்சிகளும் அதே புரட்சி அரசியலை உங்கள் கதிரைகளை சூடேற்றப் பயன்படுத்தி, மீண்டும் ஒரு பொறுப்புக் கூறலற்ற வரலாற்றுத் தவறை செய்து விடாதீர்கள்.

**வன்னிமகள் எஸ்.கே. சஞ்சிகா**

## நடந்து முடிந்த...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அழைப்பை வெறு மனேகட்சி அரசியலுக்காக பயன்படுத்தாமல் எமது அரசியல் தீர்வு விடயத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஒரு பொதுவான கட்டமைப்பை உருவாக்கி பயணிக்க கூடிய வகையில் இத்தகைய ஒற்றுமையை உருவாக்க வேண்டும்.

அரசியல் தீர்வு என்னும்போது ஒற்றை ஆட்சியை வலியுறுத்தாத மத சார்பற்ற ஓர் நாட்டினை உருவாக்க கூடிய சமஷ்டி முறையிலான ஒரு தீர்வினை வலியுறுத்தி இத் தரப்புகள் ஒன்றிணைய வேண்டும். ஒருவேளை எமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான தீர்வினை பேரினவாதம் மறுக்கும் சந்தர்ப்பத்தில் எமது இலக்கை அடைவதற்கு இவர்கள் எந்த எல்லையையும் எட்டும் மன உறுதியுடன் பயணிக்க கூடியவர்களாக இருக்க வேண்டும். இதை விடுத்து, நாம் இலங்கையர்கள் ஆகவே இலங்கைக்கு எதிராக நாம் சர்வதேசத்தில் எந்த அழுத்தங்களையும் கொண்டுவர மாட்டோம் என்று இத் தருணத்திலும் கூறுவார்களானால் இவர்கள் எம்மண்ணில் மடிந்த ஐந்து இலட்சத்திற்கும் மேலான பொது மக்களின் ஆன்மாக்களுக்கும் நாற்பதனாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் ஆன்மாக்களுக்கும் செய்யும் துரோகமாகவே தமிழ் மக்கள் கருதுவார்கள்.

பொருளாதார கட்டமைப்பு என்னும்போது எமது மக்களின் அன்றாட பிரச்சனைகளில் இருந்து நீண்ட கால பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் ஒரு நிலையான நிர்வாக கட்டமைப்பை கட்சி வேறுபாடுகள் கடந்து உருவாக்க வேண்டும். இதனை தமிழ் மக்களின் ஒரு நிழல் அரசாங்கம் போன்று செயற்படுத்தவேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் கட்டமைப்பு தொழிற் சாலைகளை உருவாக்கி எமது மக்களுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்குதல், உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து அதனை சந்தைப் படுத்தல், ஒரு குடும்பத்தில் மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பின் அவர்கள் கல்வி மற்றும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உதவிகளை வழங்குதல், விளையாட்டுத் துறையை உருவாக்கி வடக்கு கிழக்கில் உள்ள இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான பயிற்சிகளை வழங்கி அவர்களை சர்வதேச மட்டத்தில் மிளிர வைத்தல், சர்வதேச தரத்திலான ஒரு விளையாட்டு மைதானத்தை எமது பகுதியில் உருவாக்கி துடுப்பாட்டம் போன்ற பயிற்சிகளை சர்வதேச பயிற்றுவிப்பாளர்கள் ஊடாக வழங்குதல் போன்ற பல்வேறு பட்ட திட்டங்களை இந்த பொது கட்டமைப்பினூடாக கொண்டுவரலாம். தனிப்பட்ட முறையில் பலர் பலவகை சேவைகளை செய்தாலும் பொதுவான ஒரு கட்டமைப்பின் ஊடாக இவற்றை செயற்படுத்தினால் மட்டுமே மக்கள் சக்தியை ஒன்றிணைக்க முடியும். இவற்றை நாம் செய்யத் தவறும்போது மக்கள் திசை மாறி பயணிக்க தொடங்குவார்கள்.

சிங்கள தேசம் அனுபவிக்கும் இத்தகைய சலுகைகள் எம் மக்கள் கடந்த 70 வருடங்களாக இழந்தவை என்பதை இனியாவது புரிந்து தமிழ்த் தலைமைகள் ஒன்றிணையவேண்டும். இந்த ஒற்றுமை புலம் பெயர் தேசங்களில் பிரிந்திருக்கும் பல தமிழ் அமைப்புக்களையும் ஒன்றிணைக்கும் கருவியாக மாறும். இத்தகைய ஒற்றுமை மீண்டும் தமிழ் இனம் தலை நிமிர வழி வகுக்கும்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

## தலைவணங்கிப் பாடுகிறோம்...!



அநாமதேயமாயே
அன்றாடம் கழித்திட்ட
ஆளுமையின் உச்சம் அவன்
அறிவியலால் சமர்க்களத்தை
அதிரவைத்த சித்தன் அவன்

பத்திரமாய் பகலவனை
பாதுகாத்த பக்தன் அவன்
எந்திரமாய் உழைப்பதையே
மந்திரமாய் கொண்ட மகன்
அதிராமல் பேசும் அவன்
நுட்பமதால் களம் அதிரும்
அலட்டாது வாழ்ந்த இந்த
அரியணையின் வலி அதிகம்

நிலம் நீரும் முகில் வானும்
இவன்ஞான நதி நீளும்
கல்வி கலை பயிற்சி களம்
அத்தனையும் அது ஆளும்
எதிரிக்கு புதிராகி
எமக்கென்றும் கதிரானான்
விதிகூட வியந்துபட
மதியாலே பகை வென்றான்

மகளீரை மதித்தவனே
உலகறியா உத்தமனே
வேராகி எமைத் தாங்கி
பாராள வைத்தவனே
வருவாய் நீ என்றிருக்க
எருவாய் நீ ஆனதென்ன?

தளபதிக்கு இலக்கணமே
தலைமகனின் வலக்கரமே
நினைவு தவறவிட்ட இந்நாளில்
தலைவணங்கிப் பாடுகிறோம்...
நிகரில்லா காவியமே
நிதமும் உனைத் தேடுகின்றோம்..!

**மது நோமன்**



# அபிவிருத்தி அரசியலும் அரசியல் உரிமைகளும்

கானீனன்

பெரும்பான்மை இனத்தவர்களில் நியாயத்தின் பாற்பட்டு நின்று யதார்த்த பூர்வமாக பிரச்சினைகள் குறித்து கருத்து வெளியிடுபவர்களும் இல்லாமல் இல்லை. அவ்வப்போது அவர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்கள் நியாயபூர்வமாகச் சிந்திப்போர்கள் மனதில் ஆக்கபூர்வமான எண்ண விதைகளை விதைத்தாலும் கூட அத்தகையோரின் எண்ணிக்கை வெகு சொற்பமாகவே இருப்பதுடன் அவர்களின் கருத்தியல் அடிமட்ட மக்களின் மனதை சென்றடைவதேயில்லை.

அவற்றைக் கொண்டு செல்லக்கூடிய பெரும்பான்மை இனத்தவரின் மொழியில் வெளிவரும் வெகுஜன ஊடகங்கள் பெரும்பாலும் அவற்றை நிராகரித்து ஒதுங்கி விடுகின்றன. இதன் காரணமாக பௌத்த சிங்கள பேரினவாதம் தன் எண்ணப்படி கோலோச்சக்கூடியதாக உள்ளது.

இவற்றையும் மீறி ஓங்கி ஒலித்து நியாயம்பேசும் குரலுக்குரிய சில பெரும்பான்மை இனத்தவர்கள் பெருந்தேசிய இன மத அடிப்படைவாதிகளால் வெகுசன விரோதிகளாக முத்திரை குத்தப்பட்டுவிடுகிறார்கள்.

இத்தகைய அவலத்தை சந்தித்து அடையாளமற்றுப் போன பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மனித நேயர்களின் பட்டியலும் நீளமானதுதான். யதார்த்தவாதி வெகுசன விரோதி என்ற பழமொழி சாதாரணமான அர்த்தத்தை கொண்டதல்ல.

நியாயம்பேச முயன்று தோற்றும் அவமானப்பட்டும் போன இத்தகையோரில் சிலர் அதற்கு எதிர்த்திசையில் பயணப்படத்தொடங்கி பெருமகன்களாக பின்னர் அங்கீகரிக்கப்பட்டதுமுண்டு. இவையெல்லாம் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டே உள்ளன.

சரி அதை விடுவோம். அண்மையில் ஊடகமொன்றில் அரசியல் உரிமைகளே தமிழர்களின் உறுதி என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. கொழும்பு - ஓகஸ்ட் 14 எனத் திகதியிடப்பட்ட அச்செய்தியில் 'பொருளாதார ரீதியில் பிரச்சினைகளை தாங்கிக்கொள்ளும் தமிழ் மக்கள் என்றைக்காவது தமிழீழம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே இன்றும் வாழ்கின்றனர்.'

பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கான ஆசனங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சிங்கள தீப ஜாதிக பெரமுன என்ற கட்சியின் பொதுச் செயலாளரான ஜயந்த லியகனே என்பவரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் தெற்கில் வாழும் பெரும்பாலான மக்கள் அரசால் வழங்கப்படும் உறுதிமொழிகளையும் பொருளாதாரம் சார் சலுகைகளையும் அடிப்படையாகக் கொண்டே வாக்களிக்கும் நடைமுறை உள்ளது. ஆனால் இதிலிருந்து மாறுபட்டவர்களே தமிழ் மக்கள். பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளை அவர்கள் சகித்துக்கொள்வார்கள். ஆனால் உரிமை அரசியலில் அவர்கள் மிகவும் உறுதியாக இருப்பார்கள்.

தந்தை செல்வநாயகம் காலம் முதல் தனி ஈழம் என்ற கருத்தாடல் தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டு விட்டது. தமிழ் ஈழம் என்ற எதிர்பாரப்பு இன்னும் அவர்கள் மத்தியில்மறையாது இருக்கின்றது. அந்த கொள்கையில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் உறுதியாக நிற்காததன் காரணமாகவே இத்தேர்தலில் அவர்களின் வாக்கு வங்கி பெரும் சரிவு நிலையைக் கண்டது. புலிகளின் ஆயுதப்போராட்டம் தவறு எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சுமந்திரன் கருத்து வெளியிட்டிருந்தார். இதுவும் கூட்டமைப்பினர் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது எனலாம்.

விக்னேஸ்வரன் சிவாஜிலிங்கம் உட்பட ஏனைய தரப்பினர் கடும் போக்கை கடைப்பிடித்திருந்ததாலும் ஈழம்பற்றி கதைப்பதாலுமே அவர்கள் அங்கம் வகித்த கட்சிகளுக்கு இம்முறை வாக்குகள் கிடைத்தன.

பொருளாதார பிரச்சினையை தீர்த்தால் வடக்கில் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம் எனச்சிலர் கருதுகின்றனர். அவர்களின் கருத்து தவறு. ஏனெனில் புலம்பெயர் தமிழர்களுக்கு பொருளாதாரப்பிரச்சினை இல்லை. புலம்பெயர்ந்து வாழ்பவர்களுள் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் பெருமளவில் இருக்கின்றனர். அவர்களுக்கு பொருளாதாரம் பிரச்சினையே அல்ல. தமிழீழம் வேண்டும் என்றே அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக கருத்தாடல் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். நாட்டில் அதிகாரங்களைப் பகிரும் அளவுக்கு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் என்னவென்று கேட்க விரும்புகிறோம். இது தொடர்பில் விவாதம் ஒன்றை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இவ்வாறு ஜயந்த லியனகே தெரிவித்துள்ளமையானது கடந்த சில நாட்களாக தென்பகுதி அரசியல் தலைமைகளும் அமைச்சர்களும் தெரிவித்துவரும் தேர்தல் வெற்றி வெறியுடன் கூடிய ஆங்காரமானதும் அதிகாரத்தொனி கொண்டதுமான கருத்துக்களுக்கு மட்டுமல்லாது தமிழ் தேசிய நீக்க அரசியலை நாசூக்காக முன்னெக்க முயன்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் ஏனையோருக்கும்கூட சில காத்திரமான செய்திகளை கூறியுள்ளது என்றால் மிகையாகாது.

குறிப்பாக தேர்தலில் கூட்டமைப்பினர் அடைந்த வரலாற்று பின்னடைவுகளை வைத்து புலிகளின் கொள்கைகளை தமிழ் மக்கள் தோற்கடித்தனர் என்று வெற்றி திமிரில் பிரசாரம் செய்து வரும் மகிந்த அணியினரின் போலிபிரசாரத்திற்கு சரியான பதில் ஜயந்த லியகனேயினால் வழங்கப்பட்டிருக்கிறது என்றே கூறவேண்டும்.

கூட்டமைப்பினர் கொள்கை பிறழ்வுக்கு கிடைத்த பதிலடியே தேர்தலில் அவர்கள் சந்திக்க நேர்ந்த பின்னடைவுக்கு காரணமேயன்றி புலிகளின் கொள்கைகளுக்கு கிடைத்த தோல்வியென அதனை கூறமுடியாது என்று அவர் தெளிவுபடுத்தியுள்ளமையானது கூட்டமைப்பினருக்கு மட்டுமல்லாது அரசுக்கும் மொட்டுக் கட்சியினருக்கும் கிடைத்த நெற்றியடியே ஆகும்.

அதேசமயம் மக்கள் கூட்டமைப்புக்கு ஏற்படுத்திய பின்னடைவு நிலையானது தமிழ் மக்கள் ஒரே கொள்கையுடன் ஒன்றிணைந்து செயற்படாமல் விட்டமைக்கு அவர்கள் அளித்த தண்டனையே ஆகும். ஏன்று ரெலோ அமைப்பின் செல்வம் அடைக்கலநாதன் தலைவணங்கி ஒப்புக்கொண்டுள்ளமையானது தமிழ் மக்களின் வாக்களிப்பு மாற்றத்திற்கு காரணம் நியாயமானது என்று ஓங்கி உரைப்பதாக உள்ளது.

வாக்குச்சீட்டுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதை பௌத்த சிங்கள பேரினவாதிகள் புரிந்துகொள்ளும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

உண்மையான உணர்வுடன்கூடிய தேசிய சிந்தனையுடன் இயங்கும் மக்களை அபிவிருத்தி ஆசைகளோ சலுகை அறிவிப்புக்ளோ எதுவும் செய்துவிட முடியாது என்ற செய்தியை கிங்கள தீப ஜாதிக பெருமுன கட்சியின் பொதுச்செயலாளர் ஜயந்த லியகனே பதிவு செய்துள்ளார் என்றே கூறவேண்டும்.

இதனை சுயநல அபிலாசைகளுக்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் ஆட்சியாளர்களுக்கு அடிதொழுது நிற்கும் தமிழ் அரசியல் எடுபிடிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

## லண்டனில் நீங்கள் தொடர்ந்து வசிக்க அரிய வாய்ப்பு!

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

**குடும்ப அங்கத்தவர்கள் இணைந்துகொள்ளல்:**

- உங்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் 31 டிசம்பர் 2020 இற்கு முன்னதாக இணைந்துகொள்ளலாம். (சுவிஸ் பிரஜையின் கணவன் / மனைவி அல்லது குடும்பப் பங்காளி எனின் 31 டிசம்பர்2025இற்குமுன்னர்இணைந்து கொள்ளலாம்.) அவர்கள் இங்கு EU Settlement Scheme இன் கீழ் விண்ணப்பிக்கவேண்டும்.

**EU பிரஜை எனில் 31 டிசம்பர் 2020 இற்குப் பின்னர் உங்கள் குடும்ப அங்கத்தவரை இங்கு அழைக்கவேண்டுமாயின்:**

- 31 டிசம்பர் 2020 இற்கு முன்னர் குடும்ப உறவு ஆரம்பித்திருக்கவேண்டும்
- குடும்பஉறவுதொடர்ந்துபேணியிருக்க வேண்டும்.

**சுவிஸ் பிரஜை எனில் 31 டிசம்பர் 2025 வரை கணவன் / மனைவி அல்லது குடும்பப் பங்காளியினை இணைக்கமுடியும்.**

- 31 டிசம்பர் 2020 இற்கும் 31 டிசம்பர் 2025 இற்கும் இடையில் குடும்ப உறவு ஆரம்பித்திருக்கவேண்டும்.
- தொடர்ந்து குடும்ப உறவு நீடித்திருக்க வேண்டும்.

**இந்த விண்ணப்பத்தினை மேற்கொள்ளத் தேவையான ஆவணங்கள்:**

- அடையாள ஆவணம் : கடவுச் சீட்டு, தேசிய அடையாள அட்டை, Bio-metசic residence card or per- அவை.
- உங்களுடைய அடையாள ஆவணம் காலாவதியாகியிருந்தால் இந்த விண்ணப்பத்தினை மேற்கொள்ள முன்னதாக அதனைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.
- Digital photo: விண்ணப்பத்தினை நிரப்பும்போது புகைப்படம் பிடித்துக்கொள்ளமுடியும்
- National Insurance number அல்லதுபிரித்தானியாவில்எவ்வளவுகாலம் வசித்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
- கையடக்க தொலைபேசி எண்
- மின்னஞ்சல் முகவரி
- குழந்தைகளுக்கு அல்லது ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கு விண்ணப்பிப்பதாயின்உறவுமுறையினைஉறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

நீங்கள் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் ஒவ்வொன்றிலும்உங்களுடையபெயரும்திகதியும் இருக்கவேண்டும். நீண்ட காலப்பகுதியினை உள்ளடக்கும் ஆவணங்களைப் பயன்படுத்துவது மிகவும் சிறந்ததாக இருக்கும். ஏனெனில் நீங்கள் மொத்தமாக 10 ஆவணங்களை மட்டுமே விண்ணப்பத்தினை பூர்த்திசெய்யும் போது பதிவேற்றம் செய்யமுடியும். மேலதிக ஆவணங்கள் தேவைப்படும் பட்சத்தில் உள்விவகார அலுவலகம் உங்களைத் தொடர்புகொள்ளும்

பிரித்தானியாவில்எவ்வளவு காலம்வசித்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு National Insurance number இனை வழங்குவது மிகவும் சிறந்ததாக இருக்கும். பிரித்தானியாவில் குறிப்பிட்ட மாதங்களுக்கு வேலை செய்யாமல் இருந்திருந்தால் அல்லது பிரித்தானியாவுக்கு வெளியே வசித்திருந்தால் National Insurance number பதிவேட்டில் இடைவெளிகள் காணப்படலாம். எனவே அந்த இடைவெளிக் காலப்பகுதியினை உள்ளடக்குவதற்கு நீங்கள் ஆதாரங்களை வழங்க வேண்டும். உங்களிடம் நிரந்தர வதிவுரிமைக்கான ஆவணம் அல்லது காலவரையறையின்றி வசித்தல் அல்லது காலவரையறையின்றி உழ்நுழைதலுக்கான அனுமதி ('Indefinite leave to remain' or 'Indefinite leave to enter') வைத்திருக்கும்பட்சத்தில் பிரித்தானியாவில் எவ்வளவு காலம் வசித்தீர்கள் என்பதை உறுதிப்படுத்தவேண்டிய தேவையில்லை.

'EU Exit: ID Document Check' என்னும் app இனைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பதிவேற்றம் செய்யலாம். அல்லது தபால் மூலம் அனுப்பலாம்.

**குற்றம் இழைத்தவர்கள் அல்லது நீதிமன்ற விசாரணைக்கு காத்திருப்பவர்கள்:**

18 வயதிற்கு மேற்பட்ட ஒருவர் பிரித்தானியாவில் அல்லது ஏனைய நாடுகளில் குற்றம் சுமத்தப்பட்டவராக இருந்தால் நீங்கள் இழைத்த குற்றம் தொடர்பான கேள்விகளுக்கு விண்ணப்பத்தில் பதில் வழங்கவேண்டும். நீதிமன்ற விசாரணைக்குக்காத்திருந்தாலும்அந்தக்குற்றம்தொடர்பில் கேள்விகளுக்குப் பதில் வழங்கவேண்டும். உள்விவகார அலுவலகம் பிரித்தானிய மற்றும்சர்வதேசகுற்றவியல்பதிவுகளிலிருந்து பரிசோதனை மேற்கொள்ளும். குற்றங்கள் தொடர்பில் பொய்கூறப்பட்டிருந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஐரோப்பிய ஒன்றிய குடியேற்ற திட்ட (EU Settlement Scheme) விண்ணப்பம் இலவசமானது.

மேலதிக தகவல்களுக்கு:
https://www.gov.uk/settled-status-eu-citizens-familiesv




# போராளிகளை சீண்டும் சிறிலங்கா படைகள்

**மறவன்**

ராஜபக்ஷவினர் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கான பிரதான துருப்புச் சீட்டுக்களில் ஒன்றாகப் பயன்படுத்தி வந்தமை தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் தலை தூக்கப்போகின்றார்கள் என்ற கோசமே ஆகும். வடக்கில் பிரிவினைவாதமும், கிழக்கில் அடிப்படைவாதமும் தலைதூக்க விட்டது என்ற பரப்புரையை அதிகப்படுத்தியே கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷ தென்னிலங்கை மக்களின் தனித்த வாக்குகளில் வெற்றி பெற்றிருந்தார்.

ஆட்சியில் அமர்ந்த கையோடு உடனடியாகவே, சிவில் நிர்வாகத்துக்குள் உயர் பதவிகளில் படை அதிகாரிகளை அமர்த்தினார். குறிப்பாக, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகத்தின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவையும், பொருளாதர புத்தெழுச்சி தொடர் பிலான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர், கொரோனா ஒழிப்புச் செயலணியின் தலைவர் ஆகிய பதவிகளில் இராணுவ த்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவையும் நியமித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் பிரதானியாக மேஜர் ஜெனரல் கே.பி. எகொடவெலவையும், கொரோனா சுகாதார பராமரிப்பு சமூக பாதுகாப்பு நிதியத்தின் தலைவராக மேஜர் ஜெனரல் கருணாரத்ன எகோடவேலாவையும், ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளராக ரியா அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, துறைமுக அதிகாரசபையின் தலைவராக மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்கவையும், பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் பணிப்பாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராட்ச்சியையும் பதவியில் அமர்த்தினார்.

அத்துடன், வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு செயலணி தலைவராக மேஜர் ஜெனரல் சுமேதா பெரேராவையும், தேசிய புலனாய்வு பணியகத்தின் தலைவராக மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸையும், சுங்க திணைக்கள பணிப்பாளராக மேஜர் ஜெனரல் விஜிதா ரவிப்ரியவையும்

இலங்கை புனர்வாழ்வு ஆணைக்குழுவின் தலைவராக மேஜர் ஜெனரல் தர்ஷனா ஹெட்டியாராச்சியையும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவராக மேஜர் ஜெனரல் சந்திரசிறியையும், இலங்கை புலனாய்வு நிறுவனத்தின் தலைவராக பிரிகேடியர் துவான் சுரேஷ் சல்லேயையும், தீவிரவாத விசாரணை பணியகத்தின் பணிப்பாளராக ஏ.எஸ்.பி. பிரசன்ன டி அல்விஸையும், நுகர்வோர் அதிகார சபையின் தலைவராக மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயகவையும் நியமித்தார்.

பொருளாதர புத்தெழுச்சி தொடர் பிலான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக சீ.டீ. விக்ரமரத்ன, ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ், மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோரை நியமித்ததோடு மேல் மாகாண ஆளுநராக ஏர் மார்ஷல் ரொஷான் குணதிலகவையும், காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தலைவராக மேஜர் ஜெனரல் எம்.ஆர்.டபிள்யு. சொய்ஸாவையும் சுகாதார அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்கவையும் நியமித்திருந்தார்.

இதற்கு எதிராக உள்நாட்டிலும் பிராந்திய, வெளிநாடுகளிலும் கடுமையான விமர்சனங்கள் எழுந்தபோதும் கோத்தாபயவோ அல்லது ஏனைய ராஜபக்ஷவினரோ அவர்களது பரிவாரங்களோ கவலை கொண்டதாக இல்லை. ஒருபொருட்டாககூட எடுத்துக்கொள்ளாத நிலைமையே நீடித்து வந்தது.

அத்துடன் கொரோனா வைரஸ் பரவல் நிலைமைகள் ஏற்பட்டவுடன் வைரஸ் பரவலை கட்டுப்பத்துவதற்கு இராணுவம் அர்ப்பணிப்பான சேவை புரிகின்றது என்ற போர்வையில், வடக்கில் சோதனைச் சாவடிகளையும், புலனாய்வாளர்களையும், படையினரின் ரோந்து நடவடிக்கைகளையும் வெகுவாகவே அதிகரித்தது.

அதனைத்தொடர்ந்து மே18 நினைவேந்தல் தினம் அண்மிக்கவும், கொரோனா பரவலை தடுக்கின்றோம் என்றபெயரில் படைத்தரப்பினை முழுமையாக பயன்படுத்தி நினைவேந்தல் நிகழ்வுக்கு கதவடைக்க விளைந்ததோடு, போர்க்காலத்தினைப் போன்று படையினரை தாராளமாக களமிறக்கி விட்டிருந்தது ராஜபக்ஷ அரசாங்கம்.

இதற்கிடையில் முன்னாள் போராளிகளின் முக்கியஸ்தர்களின் வீடுகளுக்குச் நேரகாலமின்றி சென்ற படைத்தரப்பினர் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தல்களை விடுக்கவும் தவறவில்லை. அதுமட்டுமன்றி, அவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் முட்டுக்கட்டையிட்டனர்.

இவ்வாறான நிலைமைகள் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தல்காலத்திலும், ஆளும் தரப்பின் வேட்பாளர்களுக்கும், ஆளும் தரப்பினர் ஓட்டுக் குழுக்களுக்கும், அவர்களின் முகவர்களாக களமிறங்கிய சுயேட்சைக்குழுக்களுக்கும் படைத்தரப்பு தாராளமாக ஒத்துழைப்புக்களை வழங்கியது.

அத்தகையவர்களின் பரப்புரைகளுக்கு வெகுவான ஆதரவை வழங்கியதோடு ஒருசில வேட்பாளர்களுக்காக படைத்தரப்பினரே கிராமம் கிராமமாக சென்று பரப்புரை செய்யும் நிலைமைகளும் காணப்பட்டன. அத்துடன், தமிழ்த் தேசியக் கட்சிகளின் மக்கள் சந்திப்புக்கள், பரப்புரைக் கூட்டங்களை வேவையோடு சென்று சீர்குலைக்கும் செயற்பாடுகளையும் படைத்தரப்பினரும், புலனாய்வாளர்களும் செவ்வனே முன்னெடுத்தனர்.

தற்போது தேர்தல் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவைக்கான செயலாளர்கள் பட்டியலில் நான்கு ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் பதவி வகிக்கின்றார்கள். வெளியுறவு அமைச்சின் செயலாளராக ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரால் கமல் குணரத்ன சுகாதார அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரால் சஞ்சீவ முணசிங்க, கமத்தொழில் அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரால் ஏ.கே.சுமேத ஆகியேர் உள்ளடங்குகின்றனர்.

இவ்வாறிருக்க, வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ ஆளுநர்களை நியமிப்பதில் அரசாங்கம் தீவிர கரிசணை காட்டி வருகின்றது. குறிப்பாக வடக்கின் ஆளுநராக வன்னி ஆயுதப்படைகளின் கட்டளை தளபதியாகவும், புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான அதிகாரியாகவும் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் பொனிபேஸ் பெரேராவை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவர் வன்னியில் கடமையாற்றிய காலத்திலேயே முல்லைத்தீவில் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டதோடு கொக்குளாயில் வாடி வீடுகளில் தங்கியிருந்த சிங்களவர்களுக்கு நிரந்தரமான வீடுகள் அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் படையினர் பண்ணைகளை ஆக்கிரமித்து பயிர்ச்செய்கைகளையும், கடற்றொழிலையும் ஆரம்பித்திருந்தனர்.

இத்தகையதொருவரையே தற்போது வடக்கிற்கான ஆளுநராக நியமிப்பதில் அரசாங்கம் தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளது. மறுபக்கத்தில் வடமாகாணத்தில் முன்னாள் போராளிகளின் விபரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளிலும் படைத்தரப்பு இறங்கியுள்ளது.

கீரிமலைப்பகுதியில் ஜே.225, ஜே.226 ஆகிய கிராமசேவர்கள் பிரிவுகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்ற படையினர் முன்னாள் போராளிகளின் விபரங்களைப் பெற்றதோடு அவர்கள் வெளியிடங்களுக்கு தமது அனுமதியின்றிச் செல்லக்கூடாது என்றும் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றார்கள். இதனைவிடவும் வன்னியிலும், யாழிலும் புலனாய்வாளர்கள் முன்னாள் போராளிகளின் நடமாட்டங்களை கண்காணிப்பதிலும், பின்தொடர்வதிலும் அதிகமாக ஈடுபடுகின்றனர்.

ஒட்டுமொத்தமாக, தமிழின விடுதலைக்காக களமாடிய முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் சிலந்தி வலையில் சிக்கியவர்களாகவே இருக்கின்ற நிலைமையே நீடிக்கின்றது. சிறிலங்கா அரசாங்கமும் அவர்களின் இயந்திரமாக இருக்கும் படைத்தரப்பும் முன்னாள் போராளிகள் மனிதர்களே என்ற அடிப்படையில் அவர்களுக்கு உள்ள நடமாடும் சுதந்திரத்தினை கூட வழங்குவதாக இல்லை.

தமிழின சுவாசத்திற்காய் தம்உயிர்களை ஈகம் செய்யத் தயாரான மறவர்களை தனிமைப்படுத்த முயலும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் படைத்தரப்பிற்கும் உரிய பதிலடியை ஒட்டுமொத்த தமிழினமும் இணைந்து சர்வதேசத்தின் உதவியுடன் வழங்குவதே சாலப்பொருத்தமானதாகும். அதற்கான வரலாற்றுக்கடமைகளில் விலகியிருக்காது ஒன்றுபடுவதே காலத்தின் கட்டாயமாகவுள்ளது.

# நமது ஈழநாட்டின் உதவிக்கரம்

“நமது ஈழநாடு“ மின்னிதழின் அனுசரணையில் யாழ்ப்பாணத்தில் உள்ள சில வறுமைக்கோட்டுக்குட்பட்ட மற்றும் முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் நிதி உதவியில் மேற்படி உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதுடன் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டியும் கிளிநொச்சியில் உள்ள 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

























இணையத்தில்
‘நமது ஈழநாடு’
செய்திகள்
மற்றும் மின்னிதழை
பார்க்க
www.namathueelanadu.com